பாதுகாவலன்

PATHUKAVALAN

அருள்திரு பஸ்ரி காலமானார்

மானிடபாய்ப் பங்குத் தந்தையும், எமது அச்சகத்தின் முன்னாள் முகாமையாளரும், பாதுகாவலன் பத்தராசிரியருமாகிய அருள்திரு J. E. பிறின்ஸ் பஸ்ரியாம்பிள்ளை 21-2-89 அன்று காலமானார். 22-2-89 மாலையாழ். ஆலைகடேவிலில் அடக்கத் திருப்பலி நடைபெறும்.

University of Jaffna Sri Lanka
Received
1989-3-2
Periodicals Division
Library

மலர்: 115 இதழ்: 7,8 17-2-1989 (பெப்ரவரி 17—மார்ச் 3) ரூபா 1-50 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

எஸ்.வி.பி. தேசிய சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் 252 பந்திகளின் பிரதிநிதிகள் சந்திப்பு

விளம்பரத்தை எதிர்பாராத சேவையில்

வின்சென்ட் போல் சபையினர்

கொழும்பிலுள்ள 6ஆம் சின்னப்பர் நிலையத்தில் நடைபெற்ற புனித வின்சென்ட் போல் சபையின் தேசிய பேரவைக் கூட்டத்தின் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட இலங்கை ஆயர் மன்றத் தலைவரும் சிலாப ஆயருமாகிய பேரருள்திரு பிறங் மாக்கஸ் அவர்கள் சபையின் அன்புப் பணியின் மகத்துவத்தை விளக்கி தம் பாராட்டுகளைத் தெரிவித்தார்.

புனித வின்சென்ட் போல் பேரவையைச் சேர்ந்த இலங்கைத் தேசிய சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் ஜனவரி 28 அன்று தேசியசபையின் காரியாலயம் அமைந்துள்ள ஆரும் சின்னப்பர் நிலையத்தில் நடைபெற்றது. இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இயங்கிவரும் 252 சகோதர பந்திகளின் பிரதிநிதிகள் 300 பேர் கலந்துகொண்டனர். தேசியசபையின் தலைவர் சகோ. அல்பிறட் சில்வா தலைமை வகித்தார். பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கை ஆயர் சங்கத்தலைவரும், சிலாப ஆயரும் ஆகிய மேதகு. பிறங் மாக்கஸ் ஆண்டகை அவர்கள் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் உரையாற்றி "ஏழைகள், உதவியற்றோர், அநாதைகளில் கிறிஸ்துவைக் கண்டு அவர்களின் துயர் துடைக்க முன்வரும் போது இறைவன் எம்மை அன்பு செய்கிறார். வைத்திய சாலைகளையும், வயோதிபர் மடங்களையும் அடிக்கடி தரிசித்து அங்குள்ளவர்களுடன் உரையாடி, உதவுவதிலே அவர் கள் பெரும் ஆறுதல் அடைவர். வின்சென்ட் போல் சபையினர் இத்தகைய செயல்களில் மென்மேலும் ஈடுபடவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

யாழ். மத்திய சபையின் ஆன்ம இயக்குனர் அருள்திரு. S. H. ஜெபநேசன் அடிகளார் "உண்மையான சேவை என்பது வெறும் விளம்பரத்தையோ, பிரச்சாரத்தையோ கொண்டது அல்ல. மாறாக உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து எழும் அன்பின் ஊற்றாக உண்மைத் தொண்டு வெளிப்படவேண்டும். வலதுகை கொடுப்பதை இடதுகை அறியாதபடி தருமம் செய்வதில் வின்சென்ட் போல் சபையினர் ஈடுபட்டு அன்புக்குச் சான்று பகரவேண்டும்" என்று குறிப்பிட்டார்.

யாழ். மத்திய சபைச் செயலாளரும், தேசியசபை உறுப்பினருமாகிய சகோ சி. செலஸ்ரீன் அவர்கள் தமிழ் மொழி பெயர்ப்பாளராய் இருந்து உரையாற்றினார். ஆயர் அவர்களுடன், அருள்திரு. ஜெபநேசன் அடிகளாரும் இணைந்து கூட்டுத் திருப்பலி நிறைவேற்றினர்

தகவல்:-
நவாலியூர் சிறில் சுகந்தரன்.

அம்மானைப் புத்தகங்கள் தேவை

காலஞ்சென்ற S. தம்பிமுத்துப்பிள்ளை அவர்கள் அச்சு வேலியில் இருந்த தமது அச்சகத்தில் இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் அச்சிட்டு வெளியிட்ட பல நூல்களில் அம்மானை, நாடகம் வகையைச் சேர்ந்த நூல்களும் அடங்கும்.

1890இல் தம்பிமுத்துப்பிள்ளை அவர்கள் வெளியிட்ட (முதலாவது) எஸ்தாக்கியார் நாடகத்தினதும், பின்வரும் அம்மானைகளினதும் பிரதிகளை வைத்திருப்பவர்கள் தயவுகூர்ந்து யாழ். ஆயர் பேரருள்திரு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களிடம் ஒப்படைத்தால் அவற்றை திரும்ப அச்சேற்ற உதவியாக இருக்கும் என ஆயர் அவர்கள் கருதுகின்றார்கள்.

ஒப்படைக்கப்படும் நூற்பிரதிகள் பிரதிசெய்துகொண்ட பின் திரும்பவும் உரியவர்களிடம் விரைவில் தரப்படும்.

அம்மானைகள்:-

திருச்செல்வர் அம்மானை
தித்துஸ் அம்மானை
கிறிஸ்தினகன்னி அம்மானை
புனித செபஸ்தியார் அம்மானை
புனித சவேரியார் அம்மானை
சம்மனசு சுவாமி அம்மானை
தேவ மாதா அம்மானை

தூர இடங்களில் உள்ளவர்கள் பதிவுத் தபால் மூலம் பிரதிகளை அனுப்பிவைக்கலாம்.

அருள்திரு J. P. E. செல்வராசா
செயலாளர் நாயகம்

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.
9-2-89.

மன்னார் மறைவட்டத்தின் 8 ஆண்டு நிறைவு

சென்ற மாதம் 22-ந் திகதி (ஞாயிறு) அன்று மன்னார் மறைவட்டம் ஆரம்பிக்கப்பட்டு எட்டு ஆண்டுகள் நிறைவெய்தியுள்ளமைநினைவுகூரப்பட்டது அதற்கு முந்திய தினம் தோட்டவெளி புனித வேதசாட்சிகளின் இராக்கினி ஆலயத்தில் நற்கருணை ஆராதனை நடைபெற்றதும், திரிதினம் அனுசரிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. ஆண்டு நிறைவு தினத்தன்று காலை 7.30 மணியளவில் மன்னார் மறைவட்ட ஆயர் பேரருள்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களும், குருமுதல்வர் அருள்திரு. சேவியர் குரூஸ் அடிகளாரும், இன்னும் பல குருக்களும் கலந்துகொண்டு கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுத்தார்கள். மன்னார், தாழ்வுபாடு, பேசாலை போன்ற அயல் கிராமங்களில் இருந்து பெருந்தொகையானவர்கள் கலந்துகொண்டு மறைவட்டத்தில் பணிபுரிகின்ற ஆயர், குருக்கள், துறவிகள், பொது நிலையினர் அனைவருக்காகவும் மன்றாடினர். சகலவிதமான ஒழுங்குகளையும், வழிபாட்டுக்கான ஆயத்தங்களையும் தாழ்வுபாடு பங்குத்தந்தை அருள்திரு எஸ் எமிலியானுஸ் பிள்ளை அடிகளார் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

பிரதமரின் தகவல்குழுவில் கத்தோலிக்க குரு

பிரதமர் ராஜிவ் காந்தியின சின விஜயத்தின் போது அவருடன் செல்லும் 10 பேரடங்கிய செய்திக் குழுவினருள் தீபிகா என்னும் மலையாளப் பத்திரிகையின் ஆசிரியரான பிதா அலெக்சாந்தர் பைக்கடாவும் இடம் பெறுகிறார்.

பத்திரிகை எழுத்தாளர் பட்டம் பெற்றவரான பிதா பைக்கடா கடந்த 15 ஆண்டுகளாக தீபிகா பத்திரிகையில் பணியாற்றியுள்ளார்.

2-ம் அருள் சின்னப்பர் இந்தியாவுக்கு வந்தபோதும் பிதா பைக்கடா அவரது செய்திக்குழுவில் இடம் பெற்றார்.

இந்தியாவில் ஒரு பிரதமரின் அரசியல் பிரயாணத்தின் போது அவரது குழுவின் இடம் பெற்ற முதல் கத்தோலிக்க குருவாக இவர் இருக்கக்கூடும் என தீபிகாவின் டெல்லி நிருபர் திரு.ஜோசவ் மத்தியூ குறிப்பிட்டுள்ளார். நூறாண்டு நிறைவு பெற்ற தினசரியாகிய தீபிகா கிட்டத்தட்ட 100,000 பிரதி விற்பனையுள்ள பத்திரிகையாகும்.

வெள்ளத்தில் மிதந்த கல்முனை

அண்மையில் பெய்த அடைமழை காரணமாக கல்முனையின் சில பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது. பாதிப்புப்பெற்ற மக்களின் துயர் துடைக்க எகெட் (EHED-கிழக்கிலங்கை மனித பொருளாதார முன்னேற்ற நிலையம்) முன்வந்து பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு மீட்புப்பணியில் ஈடுபட்டது. பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டவர்களில் ஆயர். இங்லிலியும் ஒருவராவர். இந்தப்பணி சொறிக்கல்முனை போன்ற பகுதிகளுக்கும் கிடைத்துள்ளது.

தகவல்:- தேவதாசன்

அடுத்த இதழ்

எமது அடுத்த இதழ் 3-3-89 அன்று வெளிவரும். சென்ற வார இதழ் விடுமுறைகள் காரணமாக காலதாமதமாகியதால் இதழ் 7, 8 இரண்டும் ஒன்றாக வெளிவருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்த்தர் நகரத்தைக் காக்காவிடில் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்

எங்கிருந்து

நான் யார்?

ஆலயங்களில் எல்லாம் இப்பொழுது சிலுவைப் பாதைகள் இடம் பெறுகின்றன. முன்னர் இருந்த அளவுக்கு இல்லையென்றாலும் சில இடங்களில் சில வீடுகளில் வியாகுல பிரசங்கம் வாசிக்கும் ஒலி கேட்கின்றது. இன்னும் சிலர் தவக்காலத்தின் பிரதி வெள்ளிகளிலும் ஒருசந்தி அனுட்டித்து தவக்கோலம் கொள்கின்றனர்.

இவற்றின் மூலம் கிறிஸ்துவின் பாடுகளை மீளவும் நினைவு படுத்திக்கொள்வோம். இந்தப்புறத் தவக் கோலங்களும், சிலுவைப்பாதை, பசாம் முதலியனவும் உண்மையான தவக்கிரிகைகள் ஆகிவிடுமா? அன்று அவர் பாடுபட்டு இறந்ததை நாம் சிந்திப்பது எதற்காக? எம்மை நாம் ஒவ்வொருவரும் மீளாய்வு செய்து கொள்வதற்காக.

எமது சிலுவைப்பாதைபக்திமுயற்சிகள், வியாகுல பிரசங்கங்கள்; பசாம் வாசகங்கள் வெறுமனே கிறிஸ்துவின் பாடுகளை எண்ணி, கண்ணீர் விடும் செயல்களாகவே அமைந்துவிடுகின்றன. அவரது காயங்களை, பாடுகளை சிலுவையை நினைத்து அழுகின்றோம். புலம்புகின்றோம். கொடிய யூதர்களின கொடுமையான செயல்களால் ஏற்பட்ட சிலுவையைப்பற்றி மட்டும் எண்ணுகின்றோம். ஆனால் உண்மையில் நடந்தது என்ன? அன்று சிலுவை மரணத்தை ஏற்றுக் கொள்ள அவர் பிறப்பெடுத்ததை — அவர் போதனைகளை அன்றைய சமூகத்தின் சில பகுதியினர் ஏற்றுக் கொள்ளவில்லை. சத்தியத்தைச் சொல்லவந்த வரைச் சாவுக்குத் தீர்வையிட்டனர். பொய்க் குற்றச் சாட்டுகள், அவதூறுகள், ஆவலாதிகள், பொறுமைகள், பதவி மோகங்கள், பண ஆசைகள் அன்று படம் விரித்து ஆடின. பரமன் மீது விழுந்த ஒவ்வொரு அடியும் இவைகளை.

இன்றைய நாளில் அவரது பாடுகளையிட்டுச் சிந்திக்கும் போது, அவரைக் கொலைத்தீர்ப்புக்கு ஆளாக்கிய அந்தச் சமுதாயத்தில் இருந்து எந்த அளவுக்கு நாம் மாறுபட்டு விட்டோம் என்பதனையிட்டுச்சிந்திக்க வேண்டியது கடமையாகும். அங்கேதான் எமது தவம் ஆரம்பமாக முடியும்.

கரியால் நெற்றியில் சிலுவையடையாள மிட்டுக் கொண்டு எம் தவக்காலத்தை ஆரம்பித்தோம் "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பார்கள். எமது அகம் கரிபூசப்பட்டுள்ளது. எமது ஆன்மா கருமை படர்ந்திருக்கின்றது. கிறிஸ்துவின் அன்றைய பாடுகளுக்கு காரணமாகிய அதேசக்திகளின் ஆக்கிரமிப்பால் இருளடைந்திருக்கின்றது. எமது அந்த அகத்தின் புற அடையாளம் தான் நெற்றியிலே நாம் பூசிக் கொண்ட கரியடையாளம் என்று கொள்ளுதல் வேண்டும்.

"கொடிய யூதர்கள், ஆண்டவரைக் கொடுமைப் படுத்தினார்களே பாவிகள்!" என்று பெருமூச்சோடு சிந்திப்பதைவிட இன்றும் அவரைக் கொடுமைப் படுத்தும் அந்தக் கொடியவனுக இன்றும் அவரைக் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்திவைத்திருக்கும் வெளி வேடதாரியாக, பதவிப்பிரியனுக, பணப்பேயாக நான் இருக்கிறேனு என்ற வினுக்களை எழுப்புவோம்.

சிலுவைப் பாதையின் ஒவ்வொரு நிலையிலும் நின்று தியானிக்கும் போதெல்லாம் அந்த நிலைகளில் உள்ள எந்தப்பாத்திரமாக நான் நிற்கின்றேன்? நான் பிலாத்துவா? மரியாளா? சீமோனு? வெரோணிக்காளா? அல்லது அழுது புலம்பிய பெண்களாகவா? யூதர்களாகவா? அவரை அழுத்திய சிலுவையாகவா? துளைத்த ஆணியாகவா? கிழித்த முள்ளாகவா? அரிமத்தியா ஊர் சூசையாகவா? மரியமதலேனுளாகவா? அருளப்பராகவா? இவர்களைமட்டுமல்ல கிறிஸ்துவின் வாழ்வில் சந்தித்த ஒவ்வொருவரையும் சிந்திப்போம்.

இவர்களில், அல்லது இவைகளில் இன்று நான் யார்? என்று நாம் சிந்திப்போம். எம்மை நாம் மீளாய்வு செய்வோம். இந்த உண்மையான தூய்மையான ஆழ்ந்த சோதனையே எம்மில் மாற்றத்தை ஏற்படுத்தும் தவமாக அமையவேண்டும்.

தினமலர்

தவக்காலம் 3ஆம் ஞாயிறு (26-02-89)

சந்தர்ப்பத்தை அலட்சியப்படுத்தாதீர்

'தைற்ரானிக்' என்று அழைக்கப்பட்ட மிகப் பெறுமதி வாய்ந்த, பிரமாண்டமான கப்பல் நியூயோர்க்நகரை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்தது. ஏறக்குறைய இரண்டாயிரம் மக்களைச் சுமந்து கொண்டு கெம்பீரமாகச் சென்று கொண்டிருந்த அக் கப்பலின் சாரதிக்கு தொலைபேசி மணியோசை கேட்டது. ஆயினும் சற்று அலட்சியம் செய்து மூன்று நிமிடங்களின் பின்பு தொலைபேசிக்குக் காது கொடுத்த போது "எதிரே பனிமலை, சுக்கானைத் திருப்பவும்," என்ற செய்தி சிந்தனைக்கு எட்ட முன்பு கப்பல் கொடூரமான விபத்தில் சிக்கி கப்பலில் பயணம் செய்த அத்தனை உயிர்களையும், உடமைகளையும் சமுத்திரத்திற்குப் பலியாக்கி விட்டது.

மூன்று நிமிடத்தின் விலை கணக்கிடமுடியாது. நேரமும், சந்தர்ப்பங்களும் திரும்பி வருவதில்லை. தம் வாழ்வில் நழுவி விட்ட, விடப்பட்ட சந்தர்ப்பங்களை நினைந்து மனவேதனை புறும் மக்களை சந்தித்தருக்கிறோம் ஏன், நாமே அனுபவித்தும் இருக்கிறோம்.

இறைவன் தண்டிக்கவும், அழிக்கவும் விரும்புவதில்லை. அதேவேளை, மனிதன் தன் அகங்காரத்தாலும, அலட்சியத்தாலும் தன் மீது சுமத்திக் கொள்ளும் அழிவினையும் விட்டு வைக்கவும் மனமில்லாதவர். இறைவன் இரக்கத்தின் தந்தை, மீட்கும் தலைவன்.

இறைவன் வரலாற்றில் தேர்வு செய்த தலைவர்கள், வழிகாட்டிகள் போன்றோர் வழியாக மக்களை மீட்க, அழிவிலிருந்து காக்க விரும்பினர்.

மோயீசனூடாக இஸ்ரவேல் மக்களுக்கு பாலும் தேனும் பொழியும் தாயகத்தைக் காட்டினர். அந்நாட்டைச் சென்றடைய வழியைக் காட்டிய மோயீசனின் தலைமையை ஏற்று, ஆண்டவன் அருளிய சந்தர்ப்பத்தைத் தக்க முறையில் பயன் படுத்தியதால் இஸ்ராயேல் மக்கள் வாழ்வு பெற்றார்கள். விடுதலைப் பாதையில் இறைவன் ஆற்றிய அருங்குறிகளை அலட்சியப் படுத்திய மக்கள் பாதியிலேயே அழிந்து போயினர். " அவர்கள் பிணங்கள் பாலைநிலமெங்கும் சிதறிக் கிடந்தன " என்று புனித சின்னப்பர் கொரிந்து நகர் வாழ் மக்களை எச்சரிக்கிறார். அழிவையே விரும்பி, அலட்சியத்தைத் தொடர்ந்து கொண்டிருந்த மக்களை இயேசு கடுமையாக எச்சரித்தார். மூன்று ஆண்டுகளாக அத்திமரத்தில் பழம் தேடியும் ஏமாந்த தோட்டக்காரன் இன்னும் ஓர் ஆண்டை இறுதிச் சந்தர்ப்பமாக வழங்குகிறான்.

அழிக்கவல்ல, காக்க விரும்பும் இறைவன் இத் தவக்காலத்தையும், தம் வார்த்தையையும் எமக்கு அருளுகின்றார். ஒவ்வொருவரும் தன்னையும், தன் குடும்பத்தையும், கன் இனத்தையும் அழிக்கும் தீய சக்திகளை இனம் கண்டு, அடிமைத் தளைகளிலிருந்து விடுதலை பெற அழைக்கிறார்.

இறைவன் மனம் திரும்ப எச்சரிக்கை விடுபவர் மட்டுமல்ல, அத்திமரம் கனி கொடுக்க சுற்றிலும் கொத்தி எருப்போடுவது போன்று, அருளும் துணையும் தருகிறார். மனமாற்றம் என்பது மாற்று வழிகளை மட்டும்கண்டுபிடிக்கும் ஒரு புதிய முயற்சி அல்ல, மாறுக எம் நோக்குகளிலும், மனநிலைகளிலும், பார்வையிலும்ஒரு திருப்பு முனையாகும், இதற்கு நாம் இறைவன் அருளை உய்த்துணர்ந்து, அவரோடு ஒத்துழைக்கவும் வேண்டும். ஆக்கத்தின் பாதையேது, அழிவின் பாதையேது என்று சீர்தூக்குத்துப் பார்க்க எமது விசுவாச, அர்ப்பண உணர்வுகளையும் புதுப்பிக்க வேண்டும்.

மனமாற்றத்திற்கான அழைப்பு — மீண்டும் கிடைக்காமற் போகக் கூடிய ஓர் அரிய சந்தர்ப்பமாகும். மனம் திரும்புதல் இன்று, இப்போது, நடை பெற வேண்டியது. எம் வாழ்வில் எப்படி, எப்போது?

சுவாமி ஜீவா போல் அ. ம. தி.

யாத் 3: 1-15	பாலும் தேனும் பொழியும் பூமியிலே கொண்டு சேர்க்க வந்தோம்.
கொரி 15: 1-12	நமக்கு அறிவு புகட்டும் படிப்பினை இவை.
லூக் 13: 1 9	மனந்திரும்பாவிடில் எல்லோரும் அழிவீர்கள்.

தவக்காலம் 4ஆம் ஞாயிறு (05-03-89)

எம் அடிமை நிலையை உணருவோமா?

சார்ல்ஸ் டிக்கன்ஸ் என்பவர் உலகப் புகழ் பெற்ற ஓர் ஆங்கில நாவலாசிரியர். இவர் தனக்குப் பிடித்த அதிசிறந்த ஒரு குறு நாவல் 'ஊதாரிப் பிள்ளை உவமை' என்கிறார். இரக்கம்நிறை தந்தை' என்றும் அழைக்கப்படும் உவமை, தந்தையாகிய கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் நிலவும் உறவின் நிலைப்பாட்டை வருணிக்க இதைவிடவேறு எதுவுமே தேவையில்லை.

செல்லமாக வளரும் இளைய மகன் தன் தந்தையின் அன்பையும், அரவணைப்பையும் தனது சுதந்திரத்திற்குக் குறுக்கே நிற்கும் வேலி எனத் தவறாக எடை போடுகிறான். தந்தை இறக்கும் போது பிரிக்கும் பாகத்தை முதலே கேட்பது அவரை ஒரு வகையில் இறந்தவராக்குவதாகும். தன் தந்தையின் தொடர்பையே முற்றுமுழுதாக துண்டிக்க விரும்பித் தொலை நாடு செல்லுவதும், தன் சுதந்திரத்தை வரையறை எதுவுமே இல்லாது அனுபவிப்பதும், அவனது ஊதாரி வாழ்வும், அவனை "மகன்" என்ற உயரிய நிலையிலிருந்து "அடிமை" என்ற இழிநிலைக்குத் தள்ளுகிறது பஞ்சம் என்ற சூழலும், பன்றிகளின் தோழமையும், அவற்றின் நெற்று உணவும் அவனது அடிமை நிலையின் கொடுமையை உணர்த்துகின்றன.

பாவம் என்பது உறவின் முறிவு. இறைவனையும் அவரது இல்லத்தின் மகிழ்வையும் உதறித்தள்ளிவிட்டு போலிகளைத் தேடி ஓடுபவர் பாவிகள். பணத்தையும், பதவியையும், ஊதாரித்தனமான சுதந்திரத்தையும் நிம்மதிக்கு வழி என எண்ணுபவர் இறைவன் உறவைத் துண்டிப்பவர். இவர்கள் இளையமகனில் குடிகொண்ட அடிமை மனநிலை கொண்டவர். மாசுபடிந்த வாழ்வால் விளையும் குற்ற உணர்வுகள் மனிதனை வாட்டத்தான் செய்கிறது. இதனால் எம்மில் பலர் நிம்மதியை முழுமையாக இழந்த நடைபிணங்களாஞேம்.

இனி நமக்குவாழ்வே கிடையாது என்றுகூட நம்பிவிடுகிறோம். பாவக்கொடுமையின் கடைசிக்கட்டம்வரை சென்ற இளையவன் திரும்பி வந்தான். அவனும் வரமுடியும் எனபது தான் இயேசுவின் புதுமையான செய்தி. இங்குதான் உண்மைக் கிறிஸ்தவம் சவால்களைச் சந்திக்கிறது.

உறவின் முறிவிலும் முதலடி எடுத்துவைப்பது இறைவனே என்று ஞாயிறு மூன்று வாசகங்களும் எதிரொலிக்கின்றன. அன்னியரின் அடிமைத்தனத்திலிருந்து மக்களை மீட்டது இறைவன். இயேசுகிறிஸ்துவினுல் அனைவரையும் புதுப்பிறப்பாக்கியது இறைவன். தன் மகன் வருகிறான். எனத்தொலைவிலேயே பார்ப்பதற்கு அவனது வழி மீது குறிவைத்துக் கொண்டிருந்த எதிர்பார்த்த கண்கள் இறைவனின் குறைவுபடாத அன்பிற்கு உறுதியான சான்றுகளாகும். திரும்பி வந்த தனது "அடிமை- மகனுக்கு வழங்கிய வரவேற்பு எதிர்பாராததும், குறைவுள்ள மனித பரம்பரைக்கு மாறுனதுமாகும். அவ்வேளை மூத்த மகனின அதிருப்தியும், வாக்குவாதமும் இறைவனின் அளவு கடந்த அன்பிற்கு மேலும் மெருகூட்டி அதை உச்ச நிலைக்கு உயர்த்துகிறது.

பாவிகள் மனம் மாறுவது பயத்தினுல், கண்டிப்பினுல் அல்ல. இறைவனின் கனிவான

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

இளவாலையில் புனித டொன்பொஸ்கோ விழா

இளவாலை புனித யாகப்பர் பங்கில் 8 ஆண்டு காலமாக இயங்கிவரும் புனித டொன் பொஸ்கோ இளைஞர் கழகம், அதன் பாதுகாவலராம். புனித டொன் பொஸ்கோவின் திருநாளை ஜனவரி 31-ப் நாள் வெகு விமரிசையாகக் கொண்டாடியது.

இத்திருவிழாவிற்கு அயத்தமாக இருநாட்கள் நவநாள் வழிபாடுகள் நடத்தப்பட்டது. இந்நவநாளில் அருள்திரு. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளின் மறையுரையில் "இளைஞர்கள் தம் பலத்தையும், கிடைத்திரத்தையும், நல்வழிகளிலும் பயன்படுத்தலாம். தீயவழிகளிலும் பயன்படுத்தலாம் இவையனைத்தும் பெரியோர்களினதும், பெற்றோர்களினதும் வழிகாட்டலில்தான் தங்கியுள்ளது" என்றார்.

"புனித டொன் பொஸ்கோ அன்று இளைஞர்களின் வழிகளையும், அவர்கள் போகும் போக்குகளையும் கண்ணுற்று அவர்கள் மீது இரக்கம் கொண்டு அவர்களுக்குப் பிடித்த வழியில் பிடித்தமான விளையாட்டுக்கள் மூலம் கவர்ந்து நற்செய்தியை அவர்களுக்குப் பரப்பி அவர்களை நல்வழிப்படுத்தினார்."

இவ்வாண்டின் சிறப்பம்சமாக புனிதர் மரணித்து 100 ஆவது ஆண்டு விழா என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. மானத்தறுவாயிலும், அவரைச் சுற்றியுள்ள இளைஞர்களைப் பார்த்து அவர் கூறிய வார்த்தை "உன்பகைவனை நேசி; உன்னைத் துன்புறுத்துகிறவர்களுக்கு நன்மை செய். எல்லாவற்றிற்கும் மேலாக இறையரசை நாடு. தீமையில் இருந்து உங்களைக் காத்துத் தூயமையாகுங்கள்" என்பதாகும்.

திருநாள் பலியின்போது கழக இளைஞர்கள் தீபப்பவனியுடன் விழாத்திருப்பலி ஆரம்பமாகியது தொடர்ந்து இவ்விழாவின் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட கலாநிதி அருள்திரு. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் கழகக் கொடியேற்றி வைத்தார். கழகத்தலைவர் P.J. ஜெயராஜ் தலைமை உரை ஆற்றினார். பின்பு நடைபெற்ற ஒன்று கூடல் நிகழ்ச்சிக்கு அயல் பங்குகளில் உள்ள மன்றங்களில் இருந்து பல பிரதிநிதிகளும் எம் பங்கிலுள்ள மன்றங்களின் பிரதிநிதிகளும், கலந்து கழகத்தை வாழ்த்திச் சிறப்பித்தார்கள்.

பங்குத்தந்தையும், கழகத் தின்போஷகருமான அருள் திருமைக்கல் T. பற்றிக் அடிகளார் தமது உரையில் "இக்கட்டான காலகட்டத்திலும், டொன் பொஸ்கோ கழகமானது, இப் பங்கு முன்னேற்றத்திற்கு தம் மாலான பணியை ஆற்றிவருவது போற்றுதற்குரியது" என்றார். பிரதம அதிதியான கலாநிதி அருள்திரு. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தம் சிறப்புரையில் "இக்கழக இளைஞர்கள் தங்கள் எதிர் காலத்தில் நல்ல நிழல்தரும் விருட்ஷமாக இருக்கவேண்டுமென்றும், தீயவனைக்கண்டு அவனை ஒதுக்கிவிடாது அவனிலும் புனிதத்துவத்தைக் காண புரிந்துணர்வு மிக்கவர்களாக கழகத்தினர் வாழவேண்டும்" என்றும் குறிப்பிட்டார். இற்றில் கழக செயலாளர் T. S. யேக்கப் அவர்களால் நன்றியுரை கூறப்பட்டு விழா இனிதே நிறைவேறியது

புனித டொன்பொஸ்கோ கழக
பிரச்சாரப்பிரிவு
புனித யாகப்பர் ஆலயம்.
இளவாலை.

தவக்காலத்தின் 2-ம் ஞாயிறு

பொருள்:- வேலையில்லாத் திண்டாட்டமும் மனிட் மாண்பிற்கு உரிமையும்.

திருப்பலியின் முன்னுரை:

வாழ்க்கைக்கு இன்றியமையாத வருவாயைத் தேடுதல் மானிடரின் அடிப்படை உரிமையாகும். ஆனால் இன்று எமது நாட்டில் தொழிலின்றி வாழ்வோரின் எண்ணிக்கை 1,080,000 மேலும் 1980-ம் ஆண்டின் ஆடி வேலை நிறுத்தத்தின் காரணமாக வேலையிழந்தோர் 7,000. இவ்வகையான மக்களின் சீர, உளரீதியான துயரங்களை நாம் ஆய்ந்தறிந்தவர்களாக இத் திருப்பலியைத் தொடங்குவோம். உயிர் வாழ்வதற்காக மட்டுமின்றி மானிட மாண்பினை உறுதிப்படுத்துவதற்காகவும் ஒவ்வொருவருக்கும் தொழில் வசதி அமைத்துக் கொடுக்கக்கூடிய சீர்திருத்தமடைந்த அமைப்பு முறை எமது சமூகத்தில் உருவாக வேண்டும்.

உளமாற்ற வழிபாடுகள்:

1. எம்மைப் படைத்தவரும், எம்து தந்தையுமான இறைவா; உமது படைப்பின் பணியில் உம்மோடு இணைந்து தொடர்ந்து செயலாற்ற எம்மனைவரையும் அழைத்துள்ளீர். வேலைவாய்ப்பின்றி அல்லலுறுவோரின் துயரங்களை புரிந்துணராமலும் அவர்கள்மேல் அனுதாபமற்றவர்களாகவும் வாழ்ந்ததற்காக மன்னிப்பு கோருகின்றோம் ஆண்டவரே இரக்கமாயிரும் — ஆண்டவரே இரக்கமாயிரும்.

2. எமது மீட்பரும் உடன்பிறப்புமாகிய இறைவா! உழைப்பின் மாண்பினையும், ஊதியம் பெறுவதற்கான முயற்சியையும் உவமைகள் வழியாக பாராட்டியும், தொழிலாளரினதும், அவர்களின் குடும்பங்களினதும் தேவைகளுக்கேற்றபடி நீதியான ஊதியம் கொடுப்போரைப் புகழ்ந்தும் உள்ளீர். எமது பணியாளரின் தேவைகளை பொறுத்தவரை அதே அளவையை நாம் பயன்படுத்தாமல் இருந்தமைக்காக கிறிஸ்துவே இரக்கமாயிரும்.
— கிறிஸ்துவே இரக்கமாயிரும்.

3. உயிருள்ள இறைவனின் ஆவியே, படைத்து மீட்பளிக்கும் உமது சேவையில் பங்காளிகளாக்க அனைத்து நாடுகளின் திட்டங்களை வழிநடத்தி உள்ளங்களை புத்தொளியால் நிரப்புகின்றீர். வேலைவாய்ப்பு வசதிகளை சிறப்பான முறையில் உருவாக்கும் முயற்சிகளில் நாம் தகுந்த விதமாக செயல்படாத குற்றத்திற்காக மன்னிப்புக் கோருகின்றோம் – ஆண்டவரே இரக்கமாயிரும்.
— ஆண்டவரே இரக்கமாயிரும்.

விசுவாசிகளின் மன்றாட்டு:

குரு:- அன்புள்ளங்களே, தந்தை தமது மகனின் உன்னத நிலையையும் அவர் வழியாக மானிடப் பிறவிகளாகிய எமது மாண்பையும் கிறிஸ்துவின் உருமாற்றத்தால் பகிரங்கப்படுத்தியுள்ளார். எமது மாண்பினை உணர்ந்தவர்களாக உறுதியாக உழைக்க எம்மை அர்ப்பணித்து செபிப்போமாக.

வாசகர்:- தொழிலின் மாண்பையும் மானிட சமுதாயத்தை உருவாக்குவதில் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் ஆற்ற வேண்டிய பங்கினைப் பற்றிய திருச்சபையின் போதனையையும் அவ்வன்னையின் மேய்ப்பர்கள் விசுவாசிகளுக்குதொடர்ந்து எடுத்துக்காட்டவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

எல்லோர்:- ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

வாசகர்:- எல்லோரும் தகுதியான தொழில் புரிவதற்குத் தக்க வாய்ப்பும் சந்தர்ப்பமும் கொடுக்க விழைவோரின் திட்டங்கள் பலன் கொடுக்கவும், அதனால் அனைவரினதும் குறிப்பாக இளைஞரினதும் மாண்பும், மரியாதையும் விருத்தியடைய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

எல்லோர்:- ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

வாசகர்:- தொழிலாளிகளினதும் அவர்களின் குடும்பங்களினதும் அடிப்படை மானிட தேவைகளையும் பற்றிய புரிந்துணர்வு பெற்ற முதலாளிகள், அவர்களுக்கு நீதியான வேதனத்தைக் கொடுக்க வரமருளவேண்டுமென்று இறைவா. உம்மை மன்றாடுகின்றோம்.

எல்லோர்:- ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

குரு:- அன்புத் தந்தாய் எமது உழைப்பின் பயனாய் மானிட மாண்பினை நாம் அடைந்திட உமது ஆவியை அளித்திடும். தொழிலாளியினதும் அவர்களது தொழிலின் மாண்பினையும் ஆதரித்து வளர்ச்சியடைய அதே ஆவி துணைநிற்பாராக.

நன்றியின் நன்னாள்

மனித மாண்பு மேன்மை அடைவதற்கு இறைவன் தம் மூடைய படைப்பின் கொடைகள் அனைத்தையும் மனிதனுக்கு கொடுத்துள்ளார். அவர் கொடுத்த அனைத்துக் கொடைகளையும் மனிதன் தன்னுடைய வாழ்வில் பயன்படுத்தி அதன் வழியாக வரும் முதல் நற்பயன்களை பரமனுக்கு படைப்பது அவனது நன்றிக்கடனாகும் இந்த நன்றியின் நன்நாள் தான் எமது பொங்கல் விழா. இப்பொங்கல் விழா தமிழனுக்கு ஒரு இன்பவிழா.

அன்று தலைமன்னார் பங்கில் அருள்திரு செபமாலை அடிகளாரின் தலைமையில் காலை 6-30 மணியளவில் இறைவன் மனிதனுக்கு கொடுத்த தானியங்களில் ஒன்றாகிய அரிசியைப பொங்கலாக மாற்றக் கோலமிட்ட ஆலய முன்றலில் அடுப்பில் புதுப்பானை ஏற்றிப் பொங்கலை ஆரம்பித்து வைத்தார். பின் தமிழனின் பண்பை மகிமைப்படுத்தும் முகமாக தமிழ்ப் பண்பாட்டில் திருப்பலியை நிறைவேற்றினார். அவர் தமதுரையில் "பொங்கல் விழா இந்துமக்களுக்கும் உழவர்களுக்கும் மட்டும் உரித்தான விழா அல்ல மாறாக நம் ஒவ்வொருவருக்கும் உரித்தான ஒருமகிழ்ச்சியின் நன்நாள். யார் யார் என்ன தொழில் செய்தாலும் தங்கள் உழைப்பின் பயனை அனுபவித்துப் பார்ப்பவர்கள். அனைவருக்கும் ஆண்டவன் தான் கருணைகாட்டுகிறார். எனவே நாம் ஒவ்வொரு வரும் நம் நன்றிக் கடனைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.'

"பழைய ஏற்பாட்டிலும் தம் உழைப்பின் பயனாகிய முதற்கண் இறைவனுக்கு கொடுத்துள்ளார்கள். அவ்வாறே புதிய ஏற்பாட்டிலும் மரியாள் தன் ஒரே மகனை மனித மீட்புப் பணிக்காக காணிக்கையாக கொடுக்கிறாள். நாமும் திருமுழுக்கு வழியாக இறைமக்களாக மாற்றப்பட்டுள்ளோம். ஆகையால் இந்நன்னாளில் நாம் பொங்கிய பொங்கலை மட்டுமல்ல கொடுப்பது நம் நன்றி நிறைந்த உள்ளத்தை, மற்றவரின் மேல் அன்பு நிறைந்த உள்ளத்தை அவருக்கு நன்றியாக கொடுப்போம் என்று கூறினார்.

பின் பொங்கலை காணிக்கைப் பொருளாக இறைவனுக்கு படைத்து மீண்டும் பலியை தொடர்ந்து நிறைவேற்றினார் பலியின் முடிவில் அனைவருக்கும் பொங்கல் பரிமாறப்பட்டு அனைவரும் உண்டு மகிழ்ந்து இறைவனுக்கு நன்றி கூறி இல்லம் சென்றனர்.

தகவல்:- வனிதா

நெடுந்தீவுப் பங்கில் காணிக்கைமாதா திருநாள்

நீலக்கடலலை தாலாட்டும் நீளநெடுந்தீவின் மேற்கு கரையோரமாக கோயில் கொண்டெழுந்திருக்கும் புனித லோறன்சியார் ஆலயத்தில் 2-2-1989 காணிக்கை மாதா திருநாள் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மெழுகுதிரிகளை ஆசீர்வதித்ததுடன் திருப்பலியை ஆரம்பித்தார் எம் பங்குத் தந்தை அருள்திரு. M. M. V. அமிர்தகுமார் அவர்கள்.

அவர் தம் மறையுரையில் உலக அன்னையாம் புனிதகன்னி மரியாள் தன் மகனைப் பிதாவுக்குக் காணிக்கையாக ஒப்புக் கொடுத்த இந் நாளை காணிக்கை மாதா திருநாள் எனக் கொண்டாடுகின்றோம். ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னை முழுமையாக உண்மையான இறையன்புடன் இறைவனுக்குத் தன்னைக் காணிக்கையாக்க வேண்டுமெனக்கேட்டுக் கொண்டார். திருப்பலி முடிவில் தூய வெண்ணுடையணிந்த மாதா கூட்டத்தின் இளம் பெண்களால் அன்னையின் திருச்சொரூபம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. இறுதியாக அங்கு குழுமியிருந்த மக்கள் அனைவருக்கும் பங்குத் தந்தை சொரூப ஆசீர்வாதத்தை வழங்கினார் விழா இனிதே நிறைவுற்றது.

நன்றி.

தகவல்: நெடுகர் நேசன்.

புனித யாகப்பர் பங்கில் பொதுநிலையினர் கண்காட்சி

இளவாலை புனித யாகப்பர் பங்கைச் சேர்ந்த பொதுநிலையினர் கழகம் பங்குத்தந்தை M. T. பற்றிக் அடிகளின் உதவியுடன் பொதுநிலையினர் கண்காட்சி ஒன்றை 28-12-38 அன்று ஒழுங்கு செய்திருந்தது. பொதுநிலையினர் என்றால் யார்? அவர்கள் பணி என்ன?" என்பதே அதன் மையக்கருத்துக்களாகும். நிகழ்ச்சியை திருப்பலியுடன் ஆரம்பித்தனர். திருப்பலியை அருள்திரு. டேமியன் அடிகளார் நிறைவேற்றினர். திருப்பலி முடிவடைந்ததும் ஆலயவளாகத்தின் வாசலிலிருந்து பிரதம விருந்தினர் அருள்திரு அன்ரன் இராஜநாயகம் (மறைவட்ட முதல்வர் இளவாலை) மற்றும் பங்குத்தந்தை M. T. பற்றிக், அருள்திரு. இயேசுதாசன், அருள்திரு. டேமியன், அருள் சகோதர சகோதரிகள், ஆசிரியர்கள் ஆகியோர் அழைத்து வரப்பட்டனர். கழகத்தலைவர் S. டேவிட் உரையுடன் பிரதம விருந்தினர் நாடாவை வெட்டி கண்காட்சியைத் திறந்துவைத்தார். —டி. இ. இரட்ணராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவு

சூரிய கதிர்கள் தன் வெப்பத்தைச் சிறிது குறைத்திருந்தது நேரம் நண்பகல் இரண்டைத் தாண்டிவிட்டது. வீட்டில் எல்லோரும் சாதாரண நாளைப்போல் தூங்கிக்கொண்டிருக்கவில்லை. இன்று லூர்து மாதா கோவில் போகப் போகின்றோம். அங்குள்ள கோவில் திருநாள் பூசைக்குச் செல்ல ஆயத்தமானோம் அதுவும் போனவுடன் வருவதல்லை. அங்குள்ள றஜி அன்ரி வீட்டில் தங்கி அடுத்த நாள் அவ்வூர் சுற்றிப் பார்த்துத் தான் வரப் போகின்றோம். எனக்கோ அளவில்லா மகிழ்ச்சி. இப்படி தங்கி ஊர்சுற்றிப் பார்ப்பதற்கு என்றுமே சந்தர்ப்பம் கிடைப்பது அரிது. ஏனோ இன்று போக அம்மா, அப்பா ஒருமித்து என்னையும் அண்ணாவையும் கூட்டிப்போக சம்மதித்தது மட்டில்லாமகிழ்ச்சியாக இருந்தது. இந்த வேளையில் தம்பி சுபா இல்லையே என்பதுதான் சிறு கவலையாக இருந்தது.

பகல் சாப்பாடு முடிந்ததும் எல்லோரும்வெளிக்கிட்டோம், நான் எனது கைப்பையை எடுத்துக்கொண்டு பேசுக்குள் அடையாள அட்டையை வைப்பதற்காக திறந்தேன் அதற்குள் இருந்த இனியமுகம் ஒன்றுஎன்னைப் பார்த்துச் சிரித்தது. என்னையறியாமல் நானும் கண்ணைச்சிமிட்டிச் சிரித்தேன் ஆம் அதுதான் சுமன். போன முறை எங்கள் வீட்டிற்கு வந்த போது தன் போட்டோவை என்னிடம் தந்தார். நானும் ஆசையோடு பத்திரமாக என் பேசுக்குள் வைத்தேன். அது வேறு யாருமல்ல அம்மாவின் அண்ணன் மகன். ஆம் எனக்கு மச்சான் முறைதான். ஆனால் இந்த உறவு முறைகூட சில காலங்களுக்கு முன்புதான் எனக்கே தெரியும். காரணம் நான் பிறப்பதற்கு முன்பே சுமனின் குடும்பமும் எங்கள் குடும்பமும் பேச்சுவார்த்தையற்று, உறவு முறிந்த நிலையில் இருந்தது. சுமனின் தந்தை ஓர் இந்துப் பெண்ணை மணந்து தானும் இந்துவாக மாறியதன் காரணமாக குடும்பத்தில் பிரச்சனைகள் தோன்றி குடும்பப் பிளவு தோன்றிவிட்டது. சிறிது காலத்திற்கு முன்புதான் உறவு புதுப்பிக்கப்பட்டதுடன் சுமன் அடிக்கடி வீட்டிற்கு வந்து போனார். தற்போது சுமனும் ஓர் இந்துமதத்தவர் தான். ஆனால் காரணம் புரியாது என் மனம் சுமனை விரும்பியது. ஆனால் இந்த மதவேறுபாடு ஒரு பெரியவிடயமாகத் தோன்றவேயில்லை. இந்த அன்பு நாலு பேருக்குத் தெரியும்படியாக விளம்பரத்தில் வராவிட்டாலும் எம் பரிசுத்தமான அன்பு இருவருக்குள் மட்டும் பகிரப்பட்டது.

நான் அம்மா அப்பா அண்ணாமூலமும் பஸ் எடுத்து றஜி அன்ரி வீட்டிற்கு வந்து சேர்ந்தோம் உடைகளை மாற்றிக்கொண்டு திருநாள் பூசைக்குச் சன்றோம். முதல் முதல் செல்லும் கோயில் அது. அப்படிப் போகும்போது மூன்று வரம் கேட்டால் கட்டாயம் கிடைக்கும் என்று எப்போதோ என் நண்பி. கூறியது ஞாபகத்திற்கு வர நம்பிக்கையுடன் மூன்று வரங்களையும் கேட்டேன் அதில் ஒன்றாக ''இறைவா நல்லவரை, என்னை விரும்புபவரை எனக்கு வாழ்க்கைத் துணைவராகத் தாரும்'' என்று வேண்டினேன்.

சிறுகதை

றஜி அன்ரிக்கு இரண்டு பிள்ளைகள் ஒன்று நரேன் என் அண்ணா போன்று இருந்தார். மற்றது சின்ன ஒரு தங்கச்சி அண்ணாவோ நரேனுடன் நன்றாக ஐக்கியமாகிவிட்டார். எனக்கு யாரும் கிடைக்கவில்லை. அண்ணாவுடன் தான் சேர்ந்துகொள்ள வேண்டி இருந்தது. நான், அண்ணா, நரேன் மூவருமாக ஊர்சுற்ற ஆரம்பித்தோம். நரேன் பார்க்க நன்றாகத்தான் இருந்தார். ஆனால் குணம் எப்படியோ யாருக்குத் தெரியும். நன்றாகப் பழகினார் ஆனால் நரேனின் பார்வை மட்டும் எனக்குப் பிடிக்கவில்லை சில வேளைகளில் என்னை உறுத்துப் பார்ப்பதாக எனக்குத் தோன்றியது. எப்படியோ ஒருவாறு வந்து சேர்ந்தோம். நரேன் வீட்டில் மதிய போசனம் முடித்து டாம் விளையாடி விட்டு வீட்டிற்குப் போவதில்லையா?'' என்று கேட்பதற்காக வரவேற்பறைக்குச் சென்றபோது என் பெயர் அடிபட்டதால் அவர்களின் உரையாடலுக்குக் காது கொடுத்துக் கேட்டேன். திகைத்தே போய்விட்டேன். தலையுச்சியில் யாரோ சாட்டையால் அடிப்பது போன்ற வேதனை ஏற்பட்டது. என்னால் தொடர்ந்து அவ்விடத்தில் நிற்கவே இயலாமல் போய் விட்டது.

****

செல்வி A. M. டொறீன்
மிருசுவில்.

****

ஆம் அங்கு எனக்கும் நரேனுக்கும் திருமணப் பேச்சு நடந்துகொண்டிருந்தது. இப்போதுதான் எல்லாமே புரிந்தது. நான் இங்கு வந்தது பெண்பார்க்கும் படலம் நிறைவேற்றுவதற்காகத்தான். ஓ.. நான் ஒரு ரியூப் லையிட்டாக இருந்தருக்கின்றேன் அதே நரேனுடன்தான் ஊற்சுற்றினேனா? அதுதான் என்னை நரேன் அடிக்கடி பார்த்த பார்வையின் அர்த்தமோ? இப்போதும் வரவேற்பறையில் உரையாடிக்கொண்டிருப்பது காதில் தெளிவாகக் கேட்கா விட்டாலும் என்னைப்பற்றித் தான் என உணரமுடிந்தது. அதுவும் என் வாழ்க்கையையே திசைதிருப்புகிறார்கள் என்பதை நன்றாகவே உணரமுடிந்தது. இருப்பது ஏதோ நரக வேதனை அனுபவிப்பதுபோல் போல் தோன்றியது. அழுகையும், ஆத்திரமும் ஒன்றை ஒன்று முந்தியடித்துக்கொண்டு ஒருங்கே வந்தது.

என் சிந்தனை ஒரு நிலையில் இல்லை. எப்படியோ எல்லோருடன் பஸ்ஏறிவீடு வந்துசேர்ந்து விட்டேன். நான்விறைப்பு நிலையில் இருப்பது போல் இருந்தேன். என்னையாரும் கவனித்ததாகத் தெரியவில்லை. எல்லோரும்மகிழ்ச்சிக் கடலில்மிதப்பது போல் ஆரவாரம். காரணம் இந்த சுஜிக்கு விரைவில் திருமணம் நடக்கப் போகிறதாம். அதற்கு இப்பொழுதே ஆயத்தங்கள். அவர்களுக்கெங்கே புரியப்போகிறது என்மனவேதனை. அம்மா அப்பா, அண்ணா எல்லோரும் அந்தரத்தில் நிற்பதுபோல் வீட்டிற்கு வந்த நேரம் தொட்டு ஒரே குதூகலம். என் நிலை அந்தோ பரிதாபம், என்னால் அவர்கள் முன் இருக்க முடியவில்லை. திருடிய திருட்டு பொருள் வெளிப்பட்டிடுமோ என்ற பய உணர்வும் வெறுப்பும் ஒன்று சேர எழுந்து சிஸ்டர் லூசியாவிடம் சென்றேன். என்னைப் பற்றி அறிந்த அந்த சிஸ்டரிடமே கூறாத என் கதையைக் கூறி அழுதேன். அவவிடம் ஆறுதல் கிடைக்கும் என்று நினைத்த எனக்கு பெற்றோர் ஏற்பாடு செய்த நரேனையே திருமணம் செய்யும்படி கூறியது பெரும் ஏமாற்றமாக இருந்தது. 'ச்சா' இவவிடம் ஏன் தான் வந்தேனோ' என்று தோன்றியது. இருந்தபோதும் மௌனமாக திரும்பி நடந்தேன். மௌனமாக நடக்க முடிந்ததே யொழிய மன நிம்மதியுடன் நடக்கமுடியவில்லை, உண்மை தான் எவரும் எவருக்கும் இலகுவில் அறிவுரைகள் இனிமையாகவும் அடுக்கு மொழியிலும் அழகாகச் சொல்லிவிட முடியும். ஆனால் அதே அறிவுரைகளை கடைப்பிடித்து வாழ்வதில் உள்ள சிரமம் அனுபவித்தவனுக்குத் தான் தெரியும்.

என் சிந்தனைகள் சுழல ஆரம்பித்தன. ''கடமை முக்கியமா? காதல் முக்கியமா? என்று யோசித்துப் பார்த்தேன் கடமையே வென்றது. காதலை இழக்கவேண்டிவந்துவிட்டது.'' ''அப்பா விஷப் போத்தலைத் தூக்கினார் என்னால் பெற்றோரை இழக்கமுடியவில்லை'' எனக்கூறி ஒரு ஆண்மகனை ஏமாற்றும் பெண்ணின் கதைகளை கேட்டாலே இவர்களுக்கெல்லாம் எதற்கு காதலும் சுத்தரிக்காயும் என ஆத்திரப்படும் எனக்கே இன்று அதே நிலைவரும் என்று சற்றேனும் எதிர்பார்க்கவில்லை. என்ன வந்தாலும் சரிதான் சுமனைத்தவிர வேறொருத்தனுக்கும் இடமில்லை. ஆனால் அதற்கு வழி சுமனுக்காக இவர்களை எதிர்த்துப் போராடவேண்டும் அதற்குமுன் எப்படியாயிலும் சுமனைக்காண வேண்டும். கண்டு கதறி அழவேண்டும் போல இருந்தது. வீடு வந்த எனக்கு ஒரே மகிழ்ச்சி அங்கு: அங்கு என் சுமன் நிற்கின்றார்.

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

கலைநிலா

இசை ஒரு மொழி

நாதத்தின் நத்தனங்கள் இசைவடிவம் எடுக்கின்றன. இசைக்கு இந்த நாதம்தான் ஆதாரமானது. நாதத்தின் வடிவிலே இறைவனைக் கண்டவர்கள் எமது முன்னோர் இறைவனை ''ஏழிசையாய் இசைப் பயனாய் இலங்குபவன்'' என்கிறார்கள். இறைவனை மனிதன் தன் பக்கம் இயைய வைக்க இசைக்கிறான். இறைவனும் மனிதனுக்கு இசைந்து அவனுக்குத் தன் அருளவளங்களை வாரி வழங்குகிறான் ஆகவே தான் இறைவனோடு ஒன்றிப்பதற்கும் அருள்வேண்டுவதற்கும் இசை ஓர் எளிதான சாதனமாக விளங்குகின்றது

இசை செவிக்கு இன்பத்தையும், ஆன்மீக பலத்தையும் தரவல்லது. எனவே அது சிறந்த கலைகளில் ஒன்றாகப் போற்றப்படுகின்றது. சிறந்த கலைகளில் அது மேன்மையான கலையாகவும் மிளிர்கிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இசைக்கலையானது தனித்து நின்று சாதனைபுரிய வல்லது. நல்ல இசையைக் கேட்பவர் மனதைப் பக்திப பரவசத்தால் பாகாக உருகவைக்கிறது. இசை ஒரு மொழியாகத் திகழ்வதால் மனித உணர்வுகளைத் தட்டி எழுப்பிவிடுகின்றது. மொழி எதுவும் இல்லாமல் இசை வடிவமாகவே மனிதனின் உள்ளத்து உணர்வுகளை அது பிரதிபலிக்கிறது. காதல்-வீரம்-சோகம்-மகிழ்ச்சி இப்படி எத்தனையோ மனிதனின் உள்ளத்து உணர்வுகளை மொழியினாலே வெளிப்படுத்த முடியாது தவிக்கும் ஓலங்களை வெளிக்கொணரும் சக்திவாய்ந்தது.

தனித்து நின்று சாதனை படைக்கும் கவின் இசையானது பல நிகழ்வுகளோடு கூட்டுச் சேர்ந்து அந்த நிகழ்வுகளுக்கு நிறைவையும் முழுமையையும் அளிக்கிறது. நாட்டியம், நாடகம், சினிமா போன்ற கலைகளுக்கு உயிருட்டத்தைக் கொடுக்கின்றது. இசையும் பாடல்களும் ஒரு நாடகத்தைச் சிறப்புடையதாக்குகின்றது.

2-ஆம் வத்திக்கான் சங்க ஏடும் இசை பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய சொத்து என்கின்றது. இன்னும் வழிபாட்டின் முழுமைக்கு உறுதுணையாக இருந்து அதற்கு ஆடம்பரமூட்டி வழிபாட்டைச் சிறப்படைய வைக்கின்றது என்ற ஆணித்தரமான உண்மையை எடுத்துக்கூறுகின்றது.

''துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா'' என்று பாடினான் பாரதிதாசன். துன்பம் நிறைந்த மனிதன் கலைகளினால் துன்பத்தை மறந்து ஆறுதல் அடைகிறான். ஆகவே கலைவழி இறைபுகழ் கூறவும் எமது கலாசாரம், பண்பாடுகளை வாழ வைக்கவும் அதன் வழிமக்களுக்குச் சேவைசெய்யவும் துணிவோம்.

எம். ஜே. தாஸ்

நாடகக் களப்பயிற்சி

நாடகத்திற்கு ஒரு வரலாறு உண்டு, நாடகத்தின் வரலாறே மனிதனின் வரலாறு. இவ்வரலாற்றை அறிவது மனிதனை அறியவும், நாடகத்தை அறியவும் உதவியாக இருக்கும். இப்பரந்த உலகில் நடைபெறும் சம்பவங்கள், நிகழ்வுகள் அனைத்தும் நாடகமே. இடைக்காலத்தில் ஏற்பட்ட சமுதாய மாற்றங்களால் நாடகத்திற்கும், மனிதனுக்குமிடையே இடைவெளி அதிகரிக்கத் தொடங்க, நாடகம் மந்த நிலையை அடைந்தது. இந்த நிலையில்தான் நாடக வளர்ச்சிக்கு உரமாக களப் பயிற்சி அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. களப்பயிற்சியின் அங்கங்களாக குரல்பயிற்சி, அரங்க அமைப்பமுறை ஆகியவற்றினை குறிப்பிடலாம். இவற்றின் துணை கொண்டு நாடகம் எனும் ஆலமரம் அசைக்க முடியாத விருட்சமாக வளர்ந்து வருகின்றது.

நாடகத்தில் களப்பயிற்சி ஒரு நடிகனைத்தான் உருவாக்காவிட்டாலும் சமுதாயத்திற்கு ஒரு நல்ல மனிதனை உருவாக்கித்தரும் என்பது நிச்சயம். நாடகக் களப்பயிற்சியின் வளர்ச்சி கல்வித்துறையிலும் காலடி எடுத்து வைத்துள்ளது. நாடகம் கல்வி வளர்ச்சியைப் பாழாக்கும் என்ற நிலைமாறி, அது கல்வியின் ஒரு பாட நெறியாகவுள்ளது. ''நாடகமும் அரங்கியலும்'' என்ற பாடநெறி 1979-ல் க-பொ. த உயர்தர வகுப்புகளுக்கு தமிழ் மொழி மூலம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இம்முயற்சியை பாடசாலைகளில் செயல் முறைப்படுத்தும் தடவடிக்கையில் முன்னின்று உழைத்தவர்கள் திரு. குழந்தை ம-சண்முகலிங்கம், திரு. அ. தார்சீசியஸ் கலாநிதி மௌனகுரு ஆகியோர் ஆவர். இவர்கள் நாடகத்தில் ஈடுபாடு கொண்டவர்களை ஒருங்கிணைத்து, வயது எல்லையின்றி, பலமாத காலக்களப் பயிற்சி மூலம் பலகலைஞர்களை உருவாக்கி, புதிய யுத்திகளைக் கொண்டு நாடக அரங்கினை நவீனப்படுத்தி, நடிகர்களின் கடினமான உழைப்பினால் பல

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[மணிக்கதை]

பணம்

எதற்கெடுத்தாலும் காசுக் காறரோ? வசதியானவர்களோ என்று விசாரிப்பதும் விண்ணாணம் பேசுவதும், அவளுக்கு வாடிக்கையாகிப் போனது. தாய் தந்தையர் பட்ட கஷ்டங்களும், துயரங்களும் அந்த ஊரைவிட்டு அவர்கள் கிளம்பி வேறு இடம் சென்று பிழைத்து உயர்ந்ததெல்லாம் அவள் அறியாத கதை. ஆனால் அந்த ஊர் மக்களின் பாடங்களில் அதுவும் ஒன்று.

காசென்றால் இப்போதைக்கு சீமாட்டியிடம்தான் என்று அவளை முகமன் செய்துகொள்வோர் காரிய சித்திக்காகச் சொல்லிச் சொல்லியே அவளைச் சீமாட்டி ஆக்கிவிட்டனர்.

சீமாட்டி என்றால் சும்மாவா? இப்படி ஒரு தன்னிலை மறந்த நினைப்பு அவளுக்கு.

அவளிடம் பணம் பெற்றுக் கொண்ட சிலர் வெளிநாடுகளுக்கு ஓடிவிட்ட செய்தி மாத வட்டிப்பணம் வராது நின்றதிலிருந்துதான் சீமாட்டியால் அறிய முடிந்தது.

கவலைகளின் அதிகாரம் அவளுக்கு ஆரம்பமாகிவிட்டது.

வங்கியின் வைப்பு வைக்கச் சென்ற சீமாட்டியின் கணவன் விபத்தொன்றில் சிக்குண்டு பணமெல்லாமிழந்து உயிரோடு போராடிக் கொண்டிருந்தான்.

அந்த வேளையிலா சீமாட்டிக்கும் இப்படி ஆகவேண்டும். பாரிசவாதம் வந்து அவளால் எதுவுமே செய்யமுடியாதென்று ஆகிவிட்டது.

உற்றார் உறவினரென்று எவருமே எட்டியும் பார்க்கவில்லை. கால் ஊனமான நிலையிலும், சீமாட்டியின் புருஷன் அவளை அரசாங்க ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டாள் பாவம்! சீமாட்டி தர்மாஸ்பத்திரியில் கிடப்பதா? பலமில்லாத பணத்திற்காகப் பலம் பொருந்திய உறவினரை இழந்து விட்டமைக்காக அவள் கண்ணீர் வடித்தாள். பணம் அது ஒரு பொருள்தான் என்பது இப்போதுதான் அவளுக்குப் புரிந்திருக்கவேணும்

— வளவை வளவன்

அ. ம. தி. குருமடம்,
கொழும்புத்துறை
17-2-1989

அன்பு இளம் உள்ளங்களுக்கு

இருள் சூழ்ந்த உலகினில் அருள் தேடும் இளைஞர்களாய் நீங்கள் வாழவேண்டும் என்பதனை,

இகழ்வாற்றல், பாவம் செறிந்த வாழ்க்கையிலிருந்து விடுவிக்கப்பட்டு பரிசுத்ததனத்தில் வளரவேண்டும் என்பதனை,

இன்னா செய்தார்க்கு நன்னயம் செய்து நானிலத்தை வளம்பெறச் செய்யவேண்டும் என்பதனை,

இழிவான பாவ வாழ்க்கைக்குப் பரிகார முயற்சியாக சமுதாய நலன் சார்பான தியாகச் செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும் என்பதனை தவக்காலம் உணர்த்தி நிற்கின்றது.

"மனந்திரும்பி மன்னிப்புப் பெறுங்கள்,
உள்ளவன் எவனும் இல்லாதவனோடு பகிர்ந்துகொள்ளட்டும்"

என்ற கிறிஸ்துவின் வார்த்தைகளை அர்த்தம் மிகுந்த வாழ்வின் யதார்த்த நிலைகளாக மாற்றிக்கொள்ளுங்கள்.

அன்புசார் வாழ்க்கையை, அறன்சார் வாழ்க்கையை மேற்கொள்ள,

அதர்மத்தின் பிடியைத் தளர்த்துங்கள்
ஆணவத் திமிரைத் தகருங்கள்
'நான்' என்ற அகந்தையை அழியுங்கள்
'நாம்' என்ற பரந்த மனப்பான்மையினைப்
பலப்படுத்துங்கள்

நல்வாழ்த்துக்களுடன்

அன்பு நெஞ்சன் வி. பி'

குருசுமுத்தண்ணையின் கிசு கிசு-34

அடைக்கலம்: விஞ்ஞானம் கடவுளையும் காட்டிக் கொடுக்கும் போல கிடக்கண்ணை.

குருசுமுத்தண்ணை: என்ராதம்பி புதிசா கண்டிட்டாய். சேவல் இல்லாம முட்டை போடுது ஏன் தம்பி முட்டையை உடைக்க விஞ்ஞானியால் முடியும். அந்த முட்டையை செய்ய முடியுமா, அல்லது உடைஞ்சதை ஒட்டத்தான் முடியுமா, எல்லாத்திற்கும் அப்பாற்பட்டதையும் உணர்ந்தாற் சரி இல்லாட்டி அழிவுதான்.

சுவர்க்கவிதை சொந்தக்காரன் யார்?

குக்கிராமமான எங்கள் ஊரிலுள்ள பாழடைந்த பொதுக் கட்டிடச் சுவரொன்றில் யாரோ ஒருவர் கவிதையொன்று காணப்படுகின்றது. இதை எழுதியவர் தனது பெயரை குறிப்பிடாமல் விட்டுவிட்டார். ஆகவே கவிதையின் சொந்தக்காரன் யாரென்றே தெரியவில்லை. எனினும் எழுதியவர் முற்போக்கு மனமுடையவராக — சீர்திருத்தவாதியாக இருப்பார் போலும்! இதோ அக்கவிதை—

"வீணாக வாய்க்குள்ளே விரலைவைத்து
விசிலடிக்கும் இளைஞர்களே கொஞ்சங்கேளும்!
காணாத புதுமையெதை கண்டு விட்டீர்?
கவைக்குதவா கஞ்சல்களாய் ஆகாதீர்!
தூணாக நின்றுழைக்கும் வலிமை கேட்டுத்
தூரத்துப் பச்சையத்தில் மயங்கவேண்டாம்,
ஆணாகப் பிறந்ததிலே அர்த்தமுண்டு.
அடிவருடி வாழ்வதனை அறவே தள்ளும்!

தகவல்:— தி. ஜெனிபேட் குரூஸ்
புனித மாட்டீனார் குருமடம்,
யாழ்ப்பாணம்

என் இனிய இளைய தலைமுறையே!

உங்கள் கைகள்,
பணமுதலைகளைக் கண்டு
குவிய வேண்டாம்
பாசமுள்ள ஏழைகளுக்காய்
விரியட்டும்.
உங்கள் கால்கள்,
கோதை நாடிப் போகும்
போதையாக வேண்டாம்
மேதைகளை உருவாக்க
வீறுநடை போடட்டும்.
உங்கள் கண்கள்,
குற்றத்தைக் கண்டு
குருடாக வேண்டாம்
சுற்றத்தைக் காட்டும்
ஒளியாகட்டும்
உங்கள் உதடுகள்,
உள்ளதைச் சொல்ல
ஊமையாக வேண்டாம்
உண்மையை உரைக்கும்
ஊடகமாகட்டும்.
உங்கள் மனம்,
பணப் பேய்க்கு
அடிமையாக வேண்டாம்
குணத்துக்கு
எஜமானாகட்டும்.

— நெடுநகர் சுதா

சிந்தனைக்கு

1) சாதனை புரிந்த மனிதர்கள் அனைவரும் யாரிடமிருந்தும் உதவிகளைப் பெற்று முன்னேறவில்லை. அவர்கள் சந்தித்த தடைகள் தாம் பிடிவாதமாக வெற்றி பெறவேண்டும் என்ற கடின உறுதியைத் தந்து அவர்களை முன்னேற்றின.

2) நாளை நாளை என்று சோம்பேறிகள் மட்டும் தான் சொல்வார்கள். இன்றைய நாளின் அருமையை உணர்ந்தவர்கள் இதோ உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சின்னத்துரைசாந்தி

ஒரு ஒரு
குடும்பம் கதம்பம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

கணவன் குடும்பத்தில் மனைவியுடன் தமக்கும் சமபங்கு உண்டு என்பதை உணர்ந்தவகை, தனது பணிக்கச் செல்லுவதற்கு முன்பதாக தன்னால் செய்து முடிக்கக்கூடிய சிற்சில வேலைகளை தன் மனையாளுடன் சேர்ந்து புரிவதனால், இருவருக்கும் தாம் ஒருவரையொருவர் மதித்து, அன்பு செய்வது புரிய வருகின்றது கணவன் தாம் விரும்பும் உணவு வகைகளிலே முக்கியத்தும் கொடுத்து அதைக்கரிசனையாக தேடாமல் தனது மனைவியின் விருப்பங்களை அறிந்து அவைக்கேற்றனவாக செயற்படல் இருவரின் ஐக்கியத்தையும் எடுத்துக்காட்டுகின்றது. தினமும் தொழில் புரியச் செல்வதும், வீடுதிரும்பியதும் சோர்வுடன், தனியே ஓய்வெடுத்து, பின்பு படுக்கைக்குச் செல்வதும் குடும்பத்தலைவனின் பண்பல்ல. வேலையால் வீடுதிரும்பியதும் தன்களைப்பை ஆற்றியபின்பு, தன் மனைவி மக்களுடன் உறவாட முன்வரவேண்டும்.

அன்று தன் வீட்டில் நடந்துள்ள சகலவற்றையும் அறியும் ஆர்வமும், ஊக்கமும் இருத்தல் வேண்டும். குடும்பத்தாரின் சுயலங்கள் புதினங்கள், பிள்ளைகளின் படிப்புக்கள் போன்றவற்றை அவர்களிடமிருந்து. மிகுந்த அக்கறையுடன் மகிழ்ச்சியுடன் கேட்டறிவதனால் யாவருக்கும், யாவற்றிலும் சமபங்குண்டென்பதை கணவன் மனைவி, மக்கள் உணர்வதனால் குடும்பத்தில், அமைதியும் மகிழ்வும், நிறைவும் உண்டென்பதற்கையமில்லை

அதேபோன்று மனைவியும் தனது பணி அடிமை வாழ்வு - அடுப்பங்கரையுடன் நின்றுவிடுகிறதென்னும் தாழ்வு மனப்பான்மையை அடியோடு தகர்த்தெறிய வேண்டும். "இறைவன் ஆணுக்கு நிகராக பெண்ணைப் படைத்தார்" என்பதுபோல் தனது கணவனுக்குள்ள பொறுப்பில் தாமும் சரிநிகர் என்பதை உணர்ந்தால். தனது பொறுப்பில் சமையற்பகுதி ஒருசிறுபகுதியே எனஎண்ண வேண்டும். இல்லத்திற்கு விளக்காய் அமைந்துள்ள அவள் தான் ஒரு கூலிக்காரியல்ல குடும்பத்தலைவியே என உணர்ந்து கணவனின் குறைந்த வருமானத்திற்கேற்ப சிக்கன வாழ்வை ஏற்படுத்தி குடும்பத்தின் வழிவகைகளைச் சீராக்கி வரவுக்கேற்ப செலவைச்சுருக்கி ஒரு சிக்கனத் திட்டத்தை ஏற்படுத்தி அதற்கேற்ப வாழ்க்கை நடாத்தினால் குடும்பம் சந்தோஷமாக வாழும்.

இதற்குதவியாக வீட்டில் தமது நாளாந்த தேவைகளுக்கு வீட்டுத்தோட்டமொன்றைத் தயாரித்து அவற்றின் பலாபலன்களை வீட்டுபயோகத்திற்கும் தனது பிள்ளைகளுக்குரிய ஆடையணிகளை கூலி கொடுத்துத் தைப்பதற்கும் பதிலாக தாமே அவற்றைத் தைத்தும் அக்கூலியை மிகுதிப்படுத்தியும் நாகரிகம் மிகுந்த இக்காலத்தில் மின்சாரவசதிகளுடன் செய்யக்கூடிய பல வேலைகளை தானே தன்னால் இயன்றவரை புரிந்தும் (உம் அரிசி மிளகாய் திரித்தல்) மனைவி தனது ஓய்வு நேரங்களில்கோள், குண்டணி, ஆவல தி, அவதூறு, பேசுவதைத் தவிர்த்து. கோழிவளர்ப்பு வீட்டுமிருகங்களின் வளர்ப்பு, வெற்றில் ஈடுபட்டால், வீட்டில் கூடிய வருமானத்தைப் பெறலாம். பொழுது போக்காக தம் பிள்ளைகளின் உளவளர்ச்சிக்கு மனத்தைக் கவரக்கூடிய கிறிஸ்தவ ஒழுக்கம், கதைகள் பாட்டுக்களை, மகிழ்ச்சியுடன் கற்பித்தால் பிள்ளைகளும் சந்தோஷமாக இருப்பர்,

இவ்வாறு இறைவனின் சாயலாக படைக்கப்பட்ட கணவனும் மனைவியும், விசுவாசம் நிறைந்த கத்தோலிக்க நன்னெறிப்பாதையில் முன்னோக்கி வளர்ந்து தம்பிள்ளைகளுக்கு விளக்குத் தண்டின் மேல் வைத்த தீபங்களாக வாழ்வார்களேயானால், அவர்கள் திருமணத்தன்று இறைவன் முன்னிலையில் ஒப்புக் கொண்ட விசுவாச சத்தியங்களுக்கு சாட்சி பகர்பவர்களாகவும், இவ்வுலகில் தம் வழித்தோன்றல்களாக வளரும் தம்பிள்ளைகளுக்கு, 'குடும்பம் ஒரு கோவில்' 'பிள்ளை நல்ல வனாவதும் தீய வனாவதும் அன்னை வளர்ப்பினிலே' 'அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்' 'நல்லதொரு குடும்பம் பல் கலைக்கழகம்' என்ற கருத்து வாய்ந்த சொற்றொடர்களை, உண்மைப் படுத்தி வாழ்கிறார்கள் என்பதற்கையமில்லை.

—அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமறைப்பணி நிலையம்
த. ப. இல 2
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்

சிறிய இறைவாக்கினர் - 13

அப்தியாஸ் - 2

இச்சிறு நூலின் முக்கிய இறையியல் கருத்து, இறைவன் நேர்மையிக்க தீர்ப்பு வழங்குகின்றார் என்பது. தீமையாளவற்றைச் செய்கின்ற தனிநபர்களோ அல்லது நாடுகளோ இறைவனின் கண்டனத் தீர்ப்பிலிருந்து தப்பமுடியாது என்பதை இறைவாக்கினர் ஒபதியா எடுத்துரைக்கின்றார். ஏதோமித்தர் தமது நாட்டின் பாதுகாப்பு அமைப்பை முன்னிட்டு இறுமாப்புக் கொண்டிருந்த வேளையில் "கழுகைபோல் உயரப்பறந்தாலும், விண்மீன்கள் நடுவில் அவன தனது வீடடை அமைத்தாலும், இறைன் அவனைக் கீழே வீழத்துவார்" என்று ஒதியா ஏதோமித்தரின் மேல் இறைவனின் தீர்ப்பு வநதேதீரும என்கிறார்.

அடுத்து வரும் முக்கியமான கருத்து, "நீ செய்த வினைகள் உன்மேல் விழும்" என்பது. 'ஏதோமித்தர் எருசலேமின் வீழ்ச்சியின் போது செய்தவை, உரியகாலத்தில் அவர்களுக்கே திரும்ப விழைகின்றன ஏதோமித்தரின் ஞானிகளும், வீரர்களும் அழிக்கப்படுவர்' என்கிறார்.

'நீ செய்தது போலவே உனக்கும் செய்யப்படும்' என்ற விதிமுறைக்கு எடுத்துக்காட்டாகப்பல நிகழ்ச்சிகளைவேதாகமத்தில் காணலாம். நன்மையோ தீமையோ நாம் எந்த அளவில் பிறருக்கு அளக்கிறோமோ அதே அளவில்தான் நமக்கும் அளக்கப்படும். இந்த விதிமுறை தனிப்பட்டோருக்கும், நாடுகளுக்கும் பொருந்தும்.

ஆண்டவரது நாளில் உலக அமைப்பு முழுவதும் மாற்றி அமைக்கப்படும். இந்த யுகத்தில் கொடுமை செய்வோர் வரும் யுகத்தில் தண்டிக்கப்பெறுவர். இப்போது கொடுமைப்படுத்தப்படுவோர் ஆண்டவரின் நாளில் அமைதியும், பாதுகாப்பும் பெறுவர் என்ற கருத்தையும் இந்நூலில் காணலாம்.

இச்சிறு நூல் இறைவனின் நீதி வழங்கும் பண்பை வலியுறுத்திக் கூறுகிறது. வல்லரசு நாடுகள் ஏனைய சிறிய நாடுகள் மேல் ஆதிக்கம் செலுத்திவநம் இந்நாட்களில் இறைவாக்கினர் ஒபதியாவின் செயதி நம் எல்லோரையும், சிந்தித்துச்செயற்படத் தூண்டவேண்டும்.

கி. சா. பங்கிராஸ்.

அறிந்து கொள்ளுங்கள் 67

யாத்திராகமம் கூறுவது என்ன?

(சென்றவாரத் தொடர்ச்சி)

யாத்திராகமத்தில்காணப்படும்சட்டப்பொருள்கள் சிறப்பாக 10 கற்பனைகள் உடன்படிக்கைசட்டம் ஆகியவை பெரிய இறையியல் சிறப்பும் முக்கியமும் வாய்ந்தவை இஸ்ராயேல் ஒரு சமயக் குழுவாக இருப்பதற்கும் யாத்திராகம நிகழ்ச்சிகள் அடிப்படையாகும்.

ஆசிரியர் கூறும் அனைத்தும் நேரடிசாட்சியங்கள் கூறுவதாகப் பொருள் கொள்ளக் கூடாது. இது ஒரு வீரகாவியப் பாணியில் அழகு செய்து உண்மை நிகழ்ச்சிகளை விரிவு படுத்திக் கூறுகிறார்.

யாத்திரையாகம நிகழ்ச்சிகள் யூத விசுவாசத்திற்கு அடிப்படை கிறிஸ்தவ விசுவாசத்திலும் சிறப்பிடம் பெறுகிறது. எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தில் கிறிஸ்து மோயீசனுடன் ஒப்பிடப்படுகிறார் (எபி.3:3-5), அவரைவிட மேலான வராகக் காட்டப்படுகிறார். இன்னும் பல ஒப்பீடுகள் புதிய ஏற்பாட்டு நூல்களில் இருக்கின்றன.

எனவே புதிய ஏற்பாடு கிறிஸ்துவின் விடுதலையை, பலியை, நாம் ஆழமாக ஏற்று உணர்ந்து விசுவசிக்க, வாழ வேண்டுமாயின் யாத்திரையாகம நிகழ்ச்சிகளின் உண்மைப் பொருள்களை நன்கு அறிந்திருக்க வேண்டும்.

யாத்திரையாகமம் பற்றிய உண்மைகளை பல கட்டுரைகள் மூலம் உங்களுடன் பகிர்ந்து கொண்டேன். உங்களின் விமர்சனங்களை எதிர்பார்க்கிறேன். தொடரும் ஆக்கங்களில் லேவிய ராகமம்பற்றி பகிர்ந்து கொள்ள இருக்கிறேன்.

இ.ம. ஜெயசிலன்

பழமொழி ஆகமமும் புதுமொழியும்.

வாசகர்களே!

தொடர்ந்து வேதாகமத் தோடு எங்கள் நாட்டு பழமொழிகளையும், படித்து வருகின்றீர்கள் தானே! நன்றி! நப்பூர்க் கவிஞன் கூறுகின்றான்! "தாயில்லாதானை இல்லாளும் வேண்டாள் பற்-றன்றெடுத்த தாய் வேண்டாள். செல்லாதது அவன் வாயிற்சொல்" என்கிறார்.

ஆம். உண்மைதான். கையிலே பணம் இல்லையேல் குடும்பமும் சுற்றமும், உறவும். ஏன்? அவன் "சொல்லும் செல்லாது" என்று கூறிய கவிஞனுக்கு-

திருநூல் ஆசிரியர் 14/4ல் "எங்கேமாடுகள இல்லையோ அங்கே உதாழுவம் இல்லை. வெளளாண்மை அங்கே மிகுதியா அங்கே மாட்டின் பலம் வெளியாகின்றது"

இல்லாமையின இழிவையும்-உளளவர்களின் பலத்தையும், தெளிவாக்கிய இறைவாக்கினர்க்கு நபமூர் அறிஞர்கள் விட்டுக்கொடுப்பார்களா எனன?

துடிப்புடன் உரைக்கிறார்கள் இப்படி!

"சத்தியம் உள்ளவன் மனதில்-நித்தம் வேதனைதான்"

அடுத்து எங்கள் மத்தியிலே உண்மை, நீதி - மனச்சாட்சி என்பதெல்லாம் மூடு மந்திரமாகப் போய்விட்டது உண்மையுள்ளவன் மனச்சாட்சிப்படி வாழ்பவன் அவனுக்கு உலகமே தூற்றுகிறது. ஆனால் திருநூல் ஆசிரியரோ 14/5 ல் "உண்மையுள்ளசாட்சி பொய் சொல்ல மாட்டான்! வஞ்சகச் சாடசியோ பொய் சொல்லுகிறான்" என்று நமக்கு உண்மையை உணர்த்துகிறார்

பொய்யனையும் வஞ்சகனையும் வாய்விட்டுக் கண்டிக்கிறார்! நமமுன்னோர் எப்படி?

"பொய்யனின் வாய்திறக்க பொயயும், பிறக்கும்

"ஆவதும் பெண்ணாலே-அழிவதும் பெண்ணாலே" - என்றும்

"பாம்பு பிடித்தவள் பாக்கியசாலி! நல்லவாயன் சபபாதிக்க நாற்ற வாயாள் அழித்திடுவாள்"!

என்று கூறும் புதுமொழிக்குத் திருநூல் ஆசிரியர் சற்றும் இளைத்தவரா? 'அதிரடி' போடுகிறார் இப்படி!

"ஞானமுள்ள பெண் தன் வீட்டைக் கட்டுகிறாள்! ஞானமற்றவளோ கட்டினதையும் கூட கைகளால் அழிப்பாள்" (14:1)

தாய்க்குலமே! மன்னியுங்கள்! சிந்தியுங்கள்!!

தொடர்ந்தும், இப்பகுதியிலே உங்களோடு தொடர்பு கொள்ள விரும்புகின்றேன். கருத்துக்கள் ஒப்பீடுகள் பொருத்தமில்லையேல் எமக்கு எழுதுங்களேன்.!

வாரம் ஒரு சிந்தனை

"உனது நெஞ்சுக்குள் பகை குடி கொண்டிருக்கும்போது-அது பயங்கர மிருகங்கள் வாழும் 'காடாக' மாறுகிறது".

உங்கள் அன்பன்
எஸ். ஏ. நாதர்.

ஒளி: 3 | எம் விழிகளின் ஒளி யேசு
சுடர்: 7 | எம் வாழ்வின் வழி யேசு

வாரம் ஒரு வார்த்தை

பல துன்பங்களின் வழியாகவே நாம்
கடவுளின் அரசிற்குள் நுழையவேண்டும்.

அப். பணி: 4:22

யார் பெரியவர்

இன்று நமக்குள், நாமே அடிக்கடி கேட்கும் வினா? இந்த வினாவை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இயேசுவின் சீடர் தங்களுக்குள் கேட்டு விவாதித்தனர். அதைப்பற்றி ஒரு முடிவுக்கு அவர்களால் வரமுடியவில்லை. அதனால் தம் தலைவரிடம் 'விண்ணரசில் யார் பெரியவர்?" என வினவினர். நம் தலைவர் என்ன விடை பகர்ந்தார் என்று உங்களுக்குத் தெரியுமா? இயேசு ஒரு குழந்தையை எடுத்து அவர்கள் நடுவில் நிறுத்தி, அக்குழந்தையை அரவணைத்து, "உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் குழந்தைகளாக மாறுவிடில் விண்ணரசில் நுழைய மாட்டீர்கள். எனவே இக்குழந்தையைப்போல் தன்னைத் தாழ்த்திக் கொள்கிறவன் எவனோ, அவனே விண்ணரசில் பெரியவன். உங்கள் அனைவருள் சிறியவன் எவனோ, அவனே பெரியவன். ஒருவன் முதல்வனாய் இருக்க விரும்பினால் அவன் அனைவரிலும் கடைசியாய் இருக்கட்டும், அனைவருக்கும் பணியாளன் ஆகட்டும்," என்று கூறினர். இயேசு தாம் கூறியதைத் தம் வாழ்வில் வாழ்ந்து காட்டினார்.

தாழ்மையின் காலம் இது.
மனமாற்றத்தின் காலமிது
இக்காலத்தில் இயேசு தம் சீடரின்
பாதங்களைக் கழுவிய காட்சியை
நற்செய்தியின் வழியாகக்கண்டு
'யார் பெரியவர்?' என்று வினவின்
விடையாக நாம் மாறுவோம்.

—அன்பு வழி.

★

'விவிலியமும் திருக்குறளும்'

படித்தீர்களா? உங்களுக்காக இங்கே இந்நூலில் ஒரு போட்டி விரைவில் வருகிறது. இன்றே உங்கள் ஆயத்தம் செய்யுங்கள்.

★

உள்ளம் உருக மன்றாடுவோம்

களங்கமற்ற பாலகரைக் கட்டியணைத்த
யேசுவின் அன்புக் கரம்
நோயுற்றோரைத் தொட்டுச் சுகம் கொடுத்த
திருமகனின் திருக்கரம்
புயலைக் கட்டியடக்கிய
வல்லமை மிக்க கரம்
சிலுவையைத் தோளில் சுமந்து
சுமைதாங்கிய சுந்தரக் கரம்
ஆணிகளால் சிலுவையில் இறுக்கியபோதும்
இறையுணர்வில் இறுகின்ற இளங்கரம்
இறையுணர்வுடன் இணைந்து வெற்றிக்கரமாக
விளங்கியதுபோல்
எங்கள் கரங்களும்
அன்பு கரங்களாக ஆதரிக்கும் கரங்களாக
வன்றிணைந்து மனித நேயம்
மனித மாண்பு மேன்மையுற
உழைக்க வரமருள வேண்டுமென்று,
இறைவா உம்மை மன்றாடுகிறோம்
ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக்
கேட்டருளும்.

★

பொன் மொழிகள்

நமக்கு ஆண்டவன் தா அளித்திருப்பது இன்சொல் இயம்புவதற்காகவேதான். —ஹின்

பேசாத மொழி உறையிலுள்ள வாள். பேசி விட்டால் வாளைப் பிறன் கையில் கொடுத்துவிடுகின்றோம். —சுவார்லஸ்

நாதர்ன் மனிதனிடமுள்ள நல்ல பொருள். அதேவேளை கெட்டபொருளும் அதுவேதான். அது நம் வசமானால் அதை விட வேறு செல்வம் இல்லை. ஆனால் நாம் அதன் வசமானால் அதைவிடத் தீய பொருள் வேறில்லை. —அனர் காரிஸ்

தொகுத்தவர்:- கலிஸ்ரா தேவதாசன்,
கோவில் புதுக்குளம், வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1-ம் வருட நினைவஞ்சலி

அந்தோனிப்பிள்ளை பீற்றர்

மலர்வு: 29-04-1940 உதிர்வு: 01-03-1988

ஆண்டு ஒன்று ஓடிட
தாங்கிட முடியாத்துயரில்
தவித்திடும் தந்தாய் நாங்கள்
ஆண்டவன் கருணை நாடி
அனுதினம் செபிப்போம்
உமக்காய்

இவரின் ஆன்ம சாந்திக்காக கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயத்தில் 01-03-1989 அன்று காலை 6-15 மணிக்கு இரங்கல் திருப்பலியில் பங்கு பற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இவவின் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்
கரம்பொன் கிழக்கு,
ஊர்காவற்றுறை. A/12

31-ம் நாள் நினைவஞ்சலி

திருமதி அ. அன்னம்மா மிராண்டா

தாய் மடியில் - - 1935 இறை அடியில் 21-01 1989

,,வாழும் வரை அன்பு செய்தோம்
மரணத்திலும் தொடர்வோம்''

எனறும் வாழும் எல்லாம் வலல அன்பு தந்தையே! உம் மீது அளவற்ற விசுவாசம் கொண்டு உமக்காய் வாழ்ந்து - நிறைவாய் சான்று பகர்ந்து இறந்துபோன உமது அடியாள் அன்னம்மா மிராண்டாவுக்காக கண்ணீர் சிந்தி பிரார்த்திக்கின்றோம்.

உலகம் உண்டானது முதல் நீர் ஆயத்தப்படுத்திய பேரின்ப வீட்டில் இவ்அடியாளுக்கு இடமளித்து முடிவில்லாத இன்பத்தில் பங்குகொள்ளச் செய்தருளும்.

இவரின் ஆத்ம இளைப்பாற்றிக்காக 20-2-1989 அன்று காலை 6-15 மணிக்கு பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும். இறைவனின இரக்கத்தை இறைஞ்சுவோம்.

பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள், உற்றார், உறவினர்.
நசரேத் இல்லம்,
பேசாலை. A/31.

31-வது நாள் தந்தையின் நினைவு

Dr பயஸ் வஸ்தியாம்பிள்ளை

மலர்வு: 19-12-1913 உதிர்வு: 23-1-1989

அனைவருக்கும் மீட்பளிக்க அவனியில் மனுவுருவான அன்பின யேசுவே! எங்கள் மத்தியில் மனநிறைவோடு மகிழ்வுற வாழ்ந்து அனைவரையும் அன்பு செய்து மண்ணில் மறைந்தாலும் எங்கள் மனக்கண்முன் மாறாதிருக்கும் உமதடியான் பயஸ் வஸ்தியாம்பிள்ளை முடிவில்லா வாழ்வில் பங்கு கொண்டு வாழ்வு பெறச் செய்வீராக ஆமென.

இவரது ஆன்ம சாந்திக்காக யாழ். அடைக்கலநாயகி ஆலயத்தில 22-2-89 புதன்கிழமை காலை 6-15 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கற்திருப்பலியில பங்குபற்றி அவரின் ஆன்மசாந்திக்காக செபிக்குமாறு வேண்டுகின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
இல 13, 4-ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம். A/37

இறைவனடி சேர்ந்த 4-ம் வருட நினைவு

றோசாறி டயஸ் (எமிலி)

மடியில்: 12-09-1959 அடியில்: 12-02-1985

''விதைக்கப்படுவது மனித உயிர்
கொண்ட உடல்
உயிர்த்தெழுவது தேவ ஆவிக்குரிய
உயிர் கொண்ட உடல்''
(1கொரி: 15, 44.)

மரணத்தை வெற்றி கொண்ட இறை இயேசுவே! மண்ணுலகில் அன்பிலும் அமைதியிலும், அடக்கத்திலும் உமக்கு சாட்சியம் பகர்ந்த உமது இவ் அடியாளுக்கு உமது உயிர்ப்பின் மாட்சிமையை அளித்தருளும் ஆண்டவரே.

இவரின் ஆன்ம சாந்திக்காக ஊறணி புனித அந்தோனியார் ஆலயத்தில் 13-2-1989 ல் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது

கணவன், மசுள், தாய்,
சகோதரர்கள்.
தாழ்வுபாடு,
மன்னார். A/33.

விண்ணக வாழ்வின் 4-ம் ஆண்டு நினைவு

முடியப்பு சூசைப்பிள்ளை
(இளைப்பாறிய அதிபர்)

மலர்வு: 5-7-1923 உதிர்வு: 20-2-1985

''எனக்காக அழவேண்டாம் உங்களுக்காகவும், உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்.''

''அன்புக்கினிய சுகந்த வசந்தமே, உமது பிரிவை எம்மால் ஈடுசெய்ய முடியவில்லையே.''

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 24-2-89 வெள்ளிக்கிழமை காலை 6-30 மணிக்கு புனித அடைக்கல நாயகி ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இப்பலியில் பங்குபற்றுமாறு, அனைவரையும் வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
மனைவி மக்கள், மருமக்கள்
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. A/36

25-வது ஆண்டு நிறைவு தினம்

அல்போன்சஸ் சூசைதாசன்

மலர்வு: 27-06-1947 உதிர்வு; 27-02-1964

விண்ணகத் தந்தையே! என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான் என்று கூறினீரே. இறந்த இவரது ஆன்மா உமது முடிவில்லா பேரின்ப வாழ்வில் நிலைத்திருக்க உமது இரக்கத்தை இறைஞ்சுகிறோம்.

இவரது ஆன்ம சாந்திக்காக 27-2-1989 பி. ப. 4 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும், இரங்கல் திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் அழைக்கிறோம்.

இவரது பிரிவால் துயருறும்:
தாய்: அன்னம்மா அல்போன்சஸ்,
சகோதரர்கள்: கியோமர், பென்றோ, மமான்ஸ், பிறின்ஸ்ரன்.
சகோதரிகள்: அல்போன்சா, கசில்டா, ஜெலா.
பாஷையூர். A/34

விண்ணக புகுவிழாவின் 1-ம் ஆண்டு

நினைவு நாள் 17-2-1989

திரு. S. S. பாவிலுப்பிள்ளை
பொன்ராசா

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக 17-02-1989 காலை 6-15 மணிக்கு சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

மனைவி, பிள்ளைகள்
பேரப்பிள்ளைகள், மருமக்கள்

தெளிவு

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரே நேரத்தில் துயரும் மகிழ்வும் முட்டிமோதிக் கொண்டன. ஆயினும் மகிழ்வு சிறு நொடியில் சோர்ந்து போனது. துயரே மேலோங்க விரைந்தது, என் கால்கள் அதிலும் விரைவாக சுமனின் வார்த்தைகள் விரைந்தன ''சுஜி உமக்கு நடக்கவிருக்கும் கல்யாண ஏற்பாடுகளை அப்பா சொன்னார். கேட்டதிலிருந்து ஒரே சந்தோஷம் எனக்கு wish your happy life. இது சொல்லத்தான் இவ்வளவு நேரமும் காவல் நின்றனான்.'' என்று சொன்ன சுமன் கொஞ்ச நேரமும் நிற்கவில்லை உடனே போய்விட்டார்.

உலகமே தவிடுபொடியாகுவதுபோல் பிரமை ஏற்பட்டது. நிலநடுக்கம் ஏற்பட்டது போல் எல்லாமே அங்கும் இங்கும் ஆடுவதுபோல் தோன்றியது. மெல்ல இரண்டு அடிகள் பின் வைத்து இறுகக் கதவைப் பிடித்துக்கொண்டேன். திக்குப் பிரமை பிடித்தவள்போல் வாய்திறக்க முடியாது நான் நின்றேன். நல்லவேளை அவ்விடத்தில் வேறுயாருமில்லை. ஓ... சுமன் என்ன சொல்லிவிட்டுப்போய்விட்டார் சுமன் உண்மையில் என்னை விரும்பவில்லையா? நான்தான் விரும்பினேனா? மச்சாள் என்றமுறையில்தான் பழகினாரா? இல்லையே...ஒரு மச்சாளிடம்கதைப்பது போலவா என்னிடம் கதைத்தார். இல்லையே... ஏதோ ஒன்று தொண்டையை அடைத்தது. என்னால் எதையும் புரிந்துகொள்ள முடியவில்லை. சுமன் ஏன் இப்படியெல்லாம் நடக்கவேண்டும். இப்போது எதுவுமே நடக்காததுபோல் ஏன்...ஏன் என்னை ஏமாற்றவா? அல்லது நான்தான்... இல்லையே... எனக்கு ஒரே குழப்பமாக இருந்தது அப்படியே இருந்த நான் சில நிமிடங்கள் தூங்கி விட்டதை உணர்ந்தேன். இருந்த நிலையில் தூங்கியது இன்றுதான் முதல் தடவை. ஆனால் ஏதோ இலகுவாக இருப்பதுபோல் தோன்றியது. அதுவே மனதுக்கு தென்பாக இருந்தது

சற்றுமுன் இருந்த பிரச்சனை மெல்ல விலகுவதாகத் தோன்றியது. ஆனால் ஒன்று மட்டும் உண்மை சுமன் - சுஜி என்று எண்ணிய காலம் சூரிய கதிர்களைக் கண்டு மறையும் பனியாக மறைந்து ஒடுங்கி விட்டது அது வெறும் மாயை. உண்மைதான் கேட்பவை எல்லாம் சங்கீதமாகலாம். ஆனால் சங்கீதம் எல்லாம் எல்லோருக்கும் இனிமையாகத் தோன்றுமோ?

மெல்ல எழுந்து அறையில் சென்று இருதய ஆண்டவரின் படத்தின்முன் முழந்தாளிட்டு கண்களை மூடி இருகை கூப்பி. உண்மையில் உருக்கமாக. ''உமது மந்தையில் இருந்த நான் விலகிச் செல்ல நினைத்தேனே. நான் செய்யத் துணிந்தவற்றை உணரச் செய்து செம்மையான வழியைக் காட்டினீர். தந்தையே என்னை மன்னித்து ஏற்றருளும். என் இனிய யேசுவே என் கரம் பிடித்து நீரே என்னை வழி நடத்தியருளும். நீர் காட்டும் பாதையில் நான் செல்வேன். என் நல்ல யேசுவே என் மன்றாட்டை கேட்டருளும் ஆமென்.''

சிறிது மழைபெய்ததன்பின் காணப்படும் தெளிவுபோல் என் மனம் தெளிவுபெற்றது போல் காணப்பட்டது. என் தம்பி சுபா படிக்கும் கவிதை ஒன்று என் காதில் விழுந்தது. ''அழுந்துவிடட்டும் ஆத்திரங்கள்.

தெளிந்து விடட்டும் உள்ளங்கள்.

அதை எனக்காகவே சுபா உரத்துப்படிப்பதுபோல் இருந்தது. உண்மையில் எனக்கு இப்போது யாரிலும் ஆத்திரம் ஏற்படவில்லை. சற்றுமுன் இருந்த மனப்பூசலும் இல்லை. மாறாக என் மனம் ஒரு கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது. உள்ளத்தில் ஒரு தெளிவு ஏற்பட்டுவிட்டது மனமாற என்னைக் காத்த இறைவனுக்கு நன்றி கூறினேன்.

(யாவும் கற்பனையே)

தவக்காலத்தின் 4ஆம் ஞாயிறு வாசகம்

யோசு. 5 : 9 - 12 விடுதலையடைந்த மக்கள் கொண்டாடி மகிழ்ந்தார்கள்.
கொரி. 5 : 17 - 21 நம்மைத் தம்மோ ஒப்புரவாக்கினார்.
லூக். 15 : 1 3. 11 - 32 புதுக்கு தன் தந்தையிடம் வந்தான்.

நாடகக் களப்...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நல்ல நாடகங்களை மேடை ஏற்றினர். இத்தகைய நவீன உத்திகளையும், அரங்கின் புதிய வளர்ச்சிகளையும் கையாளும் முறையை 1969-70-ம் ஆண்டுகளில் ''களங்கம்'' என்ற நாடகத்தில் திருமறைக்கலாமன்றத்தினரின் நடிகர்களைக் கொண்டு இம்மன்றத்தின் ஸ்தாபகராகிய அருட்திரு நீ. ம, சவிரி முத்து அடிகள் அன்றே செய்து காண்பித்தார் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

களப்பயிற்சி என்னும் பதத்தைச் சிலர் சமகாலக் கண்ணோட்டத்தோடு சிந்திக்கலாம். அப்படி அல்ல, அரங்கில் நிற்கும் நடிகனின் அங்க அசைவுகள், குரல் வளம், அரங்க நிர்மாணம், எழுத்துத்துறை, நெறியாள்கை முதலியவற்றிற்கு பயிற்சிப்பதும், ஒரு நடிகனிடத்தில் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு, தனது ஆசானைத் தெய்வமாக மதிக்கும் குரு பக்தியை உருவாக்குவதும் அதன் போக்காகும். களப்பயிற்சி எவ்விதம் நடிகனுக்குப் பயன்பட்டது என்பதற்கு நாடக அரங்கக் கலலூரி 1979-ல் மேடை ஏற்றிய குழந்தை ம. சண்முகலிங்கத்தின் சிறுவர் நாடகமாகிய ''கூடிவிளையாடு பாப்பா'வை உதாரணத்திற்குச் சொல்லலாம்: இந் நாடகத்தை மேடைஏற்றிய போது பாடசாலைச் சிறுவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஏனென்றால் அந் நாடகத்தில் ஆடு, பூனை, நரி, கரடி, பன்றி, சேவல், நாய், குரங்கு முதலிய பாத்திரங்களாக வேடம் போட்டு நடித்தவர்கள் 35-55 வயதிற்கு உட்பட்ட 150 றாத். எடைக்கு மேற்பட்ட 5 அடி முதல் 7 அடி உயரம் கொண்ட மனிதர்கள், மிருகங்களாக வேடம் இட்டு, மிருகங்களைப் போல் நடந்தும் நிற்பதும் ஓடுவதும் கத்துவதும் போன்று, பாத்திர நிலையை மாற்றாது 2 மணி நேரம் மேடையில் செய்து காட்டியதற்கு இக்களப்பயிற்சியே உறுதுணையாக இருந்தது என்பது வெள்ளிடைமலை. எனவே நாடகத்திற்கு களப்பயிற்சி இன்றி அமையாதது.

திரு G, P. பேர்மினஸ்
நாடகப்பகுதி
திருமறைக் கலாமன்றம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திருச்சபைச் செய்தியைத் தரும் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வாரப் பத்திரிகை

பாதுகாவலன்
PATHUKAVALAN

பேசாலை பகுதி மக்களுக்கு உடனடி நிவாரணம்

அண்மையில் நடந்த அசம்பாவிதத்தினால் பாதிக்கப்பட்ட பேசாலை பகுதி மக்களுக்கும், பேசாலை தேவாலயத்தில் தஞ்சம் அடைந்துள்ள பொதுமக்களுக்கும், பேசாலை பங்குத் தந்தை வண. பிதா. தேவராஜா அடிகளின் உதவியுடன் துயர் துடைப்புச் சங்கமும், சிறுவர் பராமரிப்பு நிதியமும் இணைந்து நிவாரணப் பொருட்களை வழங்கிவருகின்றது. இதற்கு நிதி வழங்கிய யாழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகமும், கொழும்பு சிறுவர் பராமரிப்பு நிதியம் போன்றவற்றிற்கு சங்கத்தின் தலைவர் நன்றி தெரிவிக்கின்றார். மேலும் மன்னாரில் தற்போது வன்முறைகள் அதிகரித்து வருவதினால் தஞ்சம் அடையும் பொதுமக்களுக்கு இச்சங்கம் உதவிகள் பல புரிந்துவருகின்றது. ஏற்கனவே, நாகதாழ்வு, நொச்சிக்குளம், துவரங்கேணி, கள்ளிகட்டைக்காடு போன்ற பகுதியிலுள்ள மக்களுக்கு உணவுப் பொருட்களை விநியோகித்தது.

– சின்கிளேயர் பீற்றர்

இவ்வாரப் புனிதர்

ஆயரும் மறைவல்லுநருமான புனித தமியான் இராயப்பர். மாசி 21

குழந்தைப் பருவத்திலேயே இவர் பெற்றோரை இழந்தார். சிறுபராயத்தில் இன்னல்களை அனுபவித்தவர். பன்றிகளை மேய்த்து உணவு பெற்றுவந்தார். குருவாக இருந்த சகோதரரால் வளர்க்கப்பட்டார். அதனால் எழுத வாசிக்ககற்றுக்கொள்ள இவருக்குவாய்ப்பு ஏற்பட்டது. இளமையிலிருந்து இவருக்கு தவவாழ்வில் நாட்டம்மிருந்தது. முள் ஒட்டியாணம் அணிந்து தவம் மேற்கொண்டார் என இவரது வாழ்க்கை வரலாற்றில் அறிய முடிகிறது. படிப்பு முடிந்து ஆசிரியப் பணியை மேற்கொண்ட இவர் பின் துறவறத்தை மேற்கொண்டார். பதினொராம் நூற்றாண்டில் திருச்சபையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியபோது பாப்புமார் இவரது ஆலோசனைகளையும் பெற்றனர். அத்தோடு அக்காலப் பாப்புமாரால் பல இடங்களுக்கும் பிரதிநிதியாகவும் அனுப்பப்பட்டார். இவர் கருதினாலாக நியமிக்கப்பட்டபோது அப்பதவியை மிகவும் பொறுப்போடும் கவனத்தோடும் ஏற்று அநேக கலகங்களை அடக்கிப் பிரிவினைகளைத் தடுத்து திருச்சபைக்காக அயராது உழைத்தார். இவர் 1072-ம் ஆண்டு மரணமானார். 1821 ல் பன்னிரண்டாம் சிங்கராயர் எனும் பாப்பரசர் இவரைத் திருச்சபையின் மறை வல்லுநராகப் பிரகடனப்படுத்தினார்.

புனித பொலிகார்: மாசி 23

ஆயரும் வேதசாட்சியுமான புனித பொலிகார்ப் புனித நற்செய்தி அருளப்பரின் சீடராவார். இவர் ஆயராக நியமிக்கப்பட்டு அநேகரைத் திருமறையில் சேர்த்தார். பதிதரையும் வேதவிரோதிகளையும், வேதத்தைமறுதலிப்பவரையும் காணச் சகிக்கமாட்டார். இவர் அநேகரைத் திருமறையில் சேர்த்தார். வேத கலகத்தில் சிறையிலடைக்கப்பட்டார். வேதத்தை மறுதலிக்க மறுத்ததனால் நெருப்பிலே சுட்டெரிக்க கட்டளையிட்டபோது நெருப்பு அவரை அணுகவில்லை. அதனால் ஆத்திரமடைந்த அரசன் ஈட்டியால் குத்திககொல்ல ஆணையிட்டான். அதன் பின்பு சுட்டெரித்தனர். அவரது எலும்புகள் அவரது நண்பர்களால் பாதுகாக்கப்பட்டன என்பது வரலாறு. -எஸ். எம். ஜே.

1-ம்வருட நினைவஞ்சலி

பிறப்பு: 25-09-1950 இறப்பு: 21-02-1988

சுவாம்பிள்ளை பயஸ் ரட்ணசேகரம் (செல்வின்)

இறைவா உமது அடியானாகிய செல்வினுக்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும்.

இவரின் ஆத்ம இளைப்பாற்றிக்காக 21–02–1989 செவ்வாய காலை 10 மணிக்கு விளான் புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்:
அம்மா, அண்ணாமார்,
அண்ணிமார், பெறாமக்கள்,
உறவினர்.

புஸ்பவாசா,
பெரியவிளான்,
இளவாலை.

1-ம் ஆண்டு அன்பின் நினைவஞ்சலி

லூர்த்தம்மா மரியநாயகம்
பிறப்பு: 1931-01-28 இறப்பு: 1988-02-22

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 22–02–1989 புதன்கிழமை காலை 8–30 மணிக்கு கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயத்தில் திருப்பலிப் பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இப்பலியில் பங்குபற்றி ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடும்படி வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர்.

A/32.

பங்குத் தந்தையர்களே. .... !

"விடுதலையைத் தேடி...."

தவக்காலச் சிந்தனைகள்
கிளிநொச்சி மறைவட்டார வெளியீடு—4
வெளிவந்து விட்டது !

பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

அருள்திரு. ஜெறாட் சவிரிமுத்து
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

அருள்திரு. இரா சூசைநாதன்.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989-ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 17ஆம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

எம் அடிமை நிலை...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிபந்தனையற்ற, நிரந்தரமான அன்பை உணரும் போதுதான் எம் கல்லான நெஞ்சினால் எம்மையே அடிமையாக்கும் எம் துரோகத்தை உணருவோமா? நான் இழைத்த இழைக்கும் துரோகங்கள்—— இறைவன் சந்நிதியில் மகன்-மகள் என்று அழைக்கப்படத் தகுதியில்லைத்தான். நான் குற்றத்தில் மடியக்கூடாது என்று தானே தம் கரங்களை அவர் அகல விரிக்கிறார் "ஆண்டவா, நான் பெரும் பாவி என்னை மன்னியும். நான் பெரும் ..."

சுவாமி ஜீவாபோல், அ.ம.தி,

பசாம் குறுக்கெழுத்துப்போட்டி-8

(வியாகுல பிரசங்கம்)

விடைகளை அனுப்பவேண்டிய இறுதி நாள் 15-3-1989



மேலிருந்து கீழ்

2. யேசுநாதர் செய்த களவுகளில் ஒன்று. இவர்களை பரலோகத்திற்கு கடத்திச் சென்றார்.

3. கடவுளின் மறுபெயர்.

4. இப்படியும் தேவமாதாதன் மகனை விபரிக்கின்றாள்.

5. வாஞ்சையினாலும், களவினாலும் எங்களாண்டவருக்கு நடந்த கதி இது.

7. பிலாத்துவை இப்படி வருணிக்கின்றார் இவ்வாசிரியர். தலைகீழாகவுள்ளது.

8. இந்தச் சொல் அடிக்கடி வருகிறது.

11. வியாகுலதாய் இப்படி ஒப்பிடப்படுகிறாள்

13. குளிரால் நடுங்கியிருந்தவுமது.....வான சரீரத்திற் போர்க்கச்.....

16. ..... மேரையாச் சோவகக் ..... முலிக்கையெழும்பிச்..... தலைகீழாகவுள்ளது.

17. இப்படியும் நிந்தித்தார்கள்.

19. எங்களாண்டவருக்குக் கிடைத்த அடிகளில் ஒருவகை. தலைகீழாகவுள்ளது.

இடமிருந்து வலம்

1. பிலாத்துவினால் காண்பிக்கப்பட்ட குறிப்பிடம்.

2. இப்படி எனது குமாரனின் முகம் என்று வருணித்த படியினால் குழம்பியிருக்கிறது.

6. மண்டலாதீஸ்பரன் இவன் வளமாறியுள்ளான்.

9. பூங்காவனத்திற் பிரவேசித்த சீடர்களில் ஒருவர்.

10..... திருவுளம் பற்றிய வசனத்தையவர் நினைத்துப் பிரலாபித்தழுது கொண்டு.....

14. வெகுவாய்க் கிலேசப்பட்டு வாய்புதைத்து விண்ணப்பம் செய்தவர் என்றபடியினால் வளமாறியுள்ளார்.

15. மகாதேவரகசியத்தின் போசனம்.

18. தையலில்லாத நீளிய சட்டை.

20. இது மாங்கிஷமாயிராது.

21. ஏரோதின் நிந்தனை இது.

தனியன்

12. சொல்ல இது வழங்குமோ?

★ சென்றமுறைப்போட்டியின் சரியான விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்.

பரிசு 25/-

அடுத்த போட்டி 24-3-89

பொது நிலையினரினதும்
குடும்பத்தினதுமான ஆணைக்குழு
நடாத்தும்

சிறப்புப் போட்டி
"குட்டிக் கதைகள்"

போட்டி இறுதி நாள்: 30–3-89

எழுத்தாளர்களே! உங்கள் திறமைக்கு களம் - இதோ! உங்கள் படைப்பில் நற்செய்திகள் பரப்பும் கருவாக சிறுவர்களுக்கு உகந்ததான "குட்டிக்கதைகள்" எழுதி அனுப்பி பரிசில்களைத் தட்டிக்கொள்ளுங்கள்.

சிறப்பு பரிசில்களைப் பெற நிபந்தனைகள் இதோ:

கரு:— நற்செய்தி சிந்தனைகள்

(1) ஒரு பக்க புல்ஸ்காப் தாளில் அடங்கிய குட்டிக்கதை,
(2) ஒருவர் எத்தனையும் அனுப்பலாம்.
(3) நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது.

அனுப்பவேண்டிய முகவரி:- "குட்டிக்கதைகள்"

யா. ம. வ. தலைவர்
பொதுநிலையினர் ஆணைக்குழு
புனித மரியன்னை பேராலயம்
யாழ்ப்பாணம்.

பி. கு: போட்டி இறுதிநாள் 30.3.89 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

A/37

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org